2019 - இதழ் 08 இலவசம்

## ஆவணி - 2019

# உள்ளான மனிதன்

## மென்பிரதி

GRACE TABERNACLE
APOSTOLIC CHURCH

gtachurch.ca

# உள்ளான மனிதன்

மாதாந்த சஞ்சிகை - இலவசம்

2019 - இதழ் 08

**இயேசு சொன்னார்:**

**வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.**

## கிரேஸ் (ற்)ரபனக்கல்

## வெளியீடு

SCARBOROUGH, ONTARIO, CANADA ☎ 416.613.2909

(f)பின்ச் / மிட்லான்ட் சந்திப்புக்கு அருகில்

நீங்கள் தற்போது கிறிஸ்தவ **ஆவிக்குரிய** ஐக்கியமொன்றிலே இணைந்திருந்தால், அங்கே கருத்தோடு தேவனை சேவித்து, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தி, இயேசு கிறிஸ்துவுக்குள், உங்களைக் குறித்ததான பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுங்கள்.

# இந்த இதழில்...

**2019 - இதழ் 08**


## 4 பாக்கியவான்கள்

வழியிலே புயல் வீசலாம். முன்பாக திரளான தண்ணீர் பிரவாகித்து ஓடலாம். ஆனால் அவை எல்லாவற்றுக்கும் மேலாக தமது கையில் ஏந்தி சுமந்து செல்லும் தேவன் இருக்கின்றார்.

## 6 நல்ல சமாரியன்

அந்த இருளிலே பிரகாசிக்கும்படியான மெய்யான ஒளியின் தீபங்களாக பரமபிதா எங்களை ஏற்படுத்தியிருக்கின்றார். எங்கள் வெளிச்சம் உலகத்திலே மனிதர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கவேண்டும்.

## 10 பிரசங்கக் குறிப்புகள்

பிசாசின் இருளின் அதிகாரத்தினின்று விடுதலையாகி, பரலோகத்திலே தம்முடன் நித்தியமாய் வாழும்படிக்கு, தேவன் யாவரையும் தன்னிடம் வரும்படியாய் விரும்புகின்றார்.

## 12 புதிய நாளுக்குள்...

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.



**கிறேஸ் (ற்)ரபனக்கல்**

**210 Silver Star Blvd., Unit #807**
**Scarborough, ON M1V 5J9 Canada**

☎ 416.613.2909 info@gtachurch.ca


gtachurch.ca

# புதிய நாளுக்குள்...

அனுதின தியானக் குறிப்புக்கள்

## தலைப்பு அகராதி

12ம் பக்கத்திலிருந்து...

**மனக்குழப்பமான, சோர்வான நேரங்களில்**
... ஆவணி 1, 2, 6, 7, 15, 18, 23, 26, 27

**போராட்டங்களில், பிசாசின் தந்திரங்களில் வெற்றி**
... ஆவணி 5, 9, 15, 17, 18, 21, 23, 24, 26, 27

**பாவத்திலிருந்து விடுதலையடையும் வழி உண்டு**
... ஆவணி 14

**முக்கிய தீர்மானங்களை எடுக்கும் முன்**
... ஆவணி 5, 16, 23, 30, 31

**சமரசமான வாழ்க்கை வேண்டாம்**
... ஆவணி 3, 6, 23, 27

**தெய்வீக ஆசீர்வாதங்கள்**
... ஆவணி 1, 2, 6, 7, 19 , 21, 25

**தேவனுடைய சித்தம் நிறைவேறட்டும்**
... ஆவணி 12, 22, 28, 30, 31

**தேவனுக்கு பிரியமான வாழ்க்கை**
... ஆவணி 3, 4, 8, 9, 10, 12, 19, 22, 25, 29

**சமாதானமும் அமரிக்கையுமான வாழ்க்கை உண்டு**
... ஆவணி 4, 14, 16, 18, 19, 29

**பொறுமையோடு காத்திருங்கள்**
... ஆவணி 4, 14,17, 24, 28, 29, 30

**தேவ நீதி வெளிப்படும்**
... ஆவணி 15, 17, 22, 26, 31

**திவ்விய சுபாவங்கள் வெளிப்படட்டும்**
... ஆவணி 4, 8, 10, 12, 19, 22, 25, 29

**வாழ்வு தரும் திருவசனம், ஐக்கியத்தின் மேன்மை**
... ஆவணி 6, 8, 9, 13, 20, 25

**மேட்டிமை, வன்மம், பகை தலைதூக்கும் போது...**
... ஆவணி 10 , 24, 29, 31

gtachurch.ca

# பாக்கியவான்கள்

போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்

*“கர்த்தாவே, உமது கெம்பீரசத்தத்தை அறியும் ஜனங்கள் பாக்கியமுள்ளவர்கள். அவர்கள் உம்முடைய முகத்தின் வெளிச்சத்தில் நடப்பார்கள். அவர்கள் உம்முடைய நாமத்தில் நாடோறும் களிகூர்ந்து, உம்முடைய நீதியால் உயர்ந்திருப்பார்கள். நீரே அவர்கள் பலத்தின் மகிமையாயிருக்கிறீர்.”*

தேவனைத் தம் நம்பிக்கையாகக் கொண்டவர்கள் பாக்கியவான்கள். அவரது வீட்டில் வாசமாயிருக்கிறவர்கள் பாக்கியவான்கள். அவரிலே பெலன் கொள்ளுகிற மனுஷனும், தங்கள் இருதயங்களில் செவ்வையான வழிக ளைக் கொண்டிருக்கிறவர்களும் பாக்கியவான்கள் என்று தேவனால் வரும் பாக்கியத்தைக் குறித்து வேதத்திலே எழுதப்பட்டுள்ளது.

தேவனின் வார்த்தைகள் ஜீவ வார்த்தைகள். அவ்வார்த்தைகளை அறிந்து அதை தமது வாழ்வில் பற்றிக்கொள்பவர்கள் தேவனைத் தமது நம்பிக்கையாக கொள்ளுகின்றார்கள். தேவனின் வார்த்தைகள் வல்லமையுள்ளவைகள். அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட யாவும் நிற்கும். அவர் தமது வார்த்தையினால் எல்லாவற்றையும் சிருஷ்டித்தார். அவரது சத்தம் கெம்பீரமுள்ளது.

இயேசு ஒரு நாள் படவில் இருந்தபடி ஜனங்களுக்குப் உபதேசம்பண்ணினார். ஜனங்கள் கடற்கரையிலே நின்றார்கள். அன்று சாயங்காலத்தில் அவர் தமது சீஷர்களை நோக்கி, அக்கரைக்குப் போவோம் வாருங்கள் என்றார். அவர்கள் ஜனங்களை அனுப்பிவிட்டு, அவர் படவிலிருந்தபடியே அவரைக் கொண்டுபோனார்கள், வேறே படவுகளும் அவரோடே கூட இருந்தது. அப்பொழுது பலத்த சுழல்காற்று உண்டாகி, படவு நிரம்பத்தக்கதாக, அலைகள் அதின்மேல் மோதிற்று. கப்பலின் பின்னணியத்தில் அவர் தலையணயை வைத்து நித்திரையாயிருந்தார், அவர்கள் அவரை எழுப்பி, போதகரே, நாங்கள் மடிந்துபோகிறது உமக்குக் கவலையில்லையா என்றார்கள். அவர் எழுந்து, காற்றை அதட்டி, கடலைப்பார்த்து, இரையாதே, அமைதலாயிரு என்றார். அப்பொழுது காற்று நின்றுபோய், மிகுந்த அமைதல் உண்டாயிற்று. அவர் அவர்களை நோக்கி, ஏன் இப்படிப் பயப்பிட்டீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற்போயிற்று என்றார்.

கர்த்தருடைய சீஷர்கள் கடல் பிரயாணத்தில் மிகவும் அனுபவமுள்ளவர்கள். அவர்களில் சிலர் மீன் பிடிப்பதை சிறுவயதிலிருந்தே செய்பவர்கள். அவர்கள் எல்லோரும் பயப்படத்தக்கதாய் அவர்கள் பிரயாணத்தில் பலத்த

சுழல் காற்று வீசியது. அவர்கள் நம்பிக்கை இழந்து அழிவுதான் தமது முடிவு என்று எண்ணினார்கள். ஆனால் இயேசு கட லையும் காற்றையும் அமைதிப்படுத்தினார். பின்பு அவர்களை நோக்கி, ஏன் இப்படிப் பயப்பிட்டீ ர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற் போயிற்று என்றார். ஏனென் றால் அக்கரைக்குப் போவோம் என்று அவர் முன்பாகவே சொல்லியிரு ந்தார்.

வழியிலே புயல் வீசலாம். முன்பாக திரளான தண்ணீர் பிரவாகித்து ஓடலாம். ஆனால் அவை எல்லாவற்றுக்கும் மேலாக தமது கையில் ஏந்தி சுமந்து செல்லும் தேவன் இருக்கின்றார். அதனாலே தான் தேவ னின் வழி நடத்துதலைக் குறித்து, “அவர்கள் உம்முடைய முகத்தின் வெளிச்ச த்தில் நடப்பார்கள். அவர்கள் உம்முடைய நாமத்தில் நாடோறும் களிகூர் ந்து, உம்முடைய நீதியால் உயர்ந்திருப்பார்கள். நீரே அவர்கள் பலத்தின் மகிமையாயிருக்கிறீர்.” என்று சொல்லப்பட்டுள்ளது.

தேவன் மனிதரை அன்போடு சிருஷ்டித்தார். மற்றைய சிருஷ்டிப்புக்களை ப்போன்று சிருஷ்டியாமல், அவர்களைத் தமது சாயலின் படியேயும் தமது ரூபத்தின்படியேயும் சிருஷ்டித்தார். அவர்களை சுயாதினமுள்ளவர்களா கவே சிருஷ்டித்தார். மனிதர்களோ தமக்கென்று பொல்லாத வழிகளைத் தெரிந்து கொண்டார்கள். அதன் முடிவோ அழிவு. தேவனோ மனிதரில் அன்பு கூர்ந்து, மனிதர் எல்லோரும் மேன்மை அடையும்படி தமது வழியை எல்லோருக்கும் தெரியப்படுத்துகின்றார்.

பிரியமான சகோதரனே சகோதரியே,

வனாந்திரம் வயல்வெளியாகும். வெட்டாந்தரை ஏதேன் தோட்டத்தைப் போலாகும். வயல்வெளி மாறாத இன்பம் காணும் என்று தமது ஆசீர் வாதத்தை அறிவித்த தேவன், எங்கள் வாழ்வை வளமாக்குபவரா யுள்ளார். வனாந்திரம் போலுள்ள வாழ்வை வயல்வெளி போன்று விளைநிலமாக்கு கின்றார். வெட்டாந்தரை போலுள்ள வாழ்வை ஏதேன் தோட்டத்தைப் போன்று வளமாக்குகின்றார். வயல்வெளி மாறாத இன்பம் காணும் என்று கூறப்பட்டுள்ளபடியே வாழ்வை செழிப்பாக்குகின்றார். அவரையே பற்றிக் கொள். அவர் தம்மிடத்தில் வருபவர்களை புறம்பே தள்ளுவதில்லை.

**எம்மோடு கூட ஜெபிக்க விரும்பினால் ஞயிறு காலை 10:00 மணிக்கு தேவ ஆராதனையில் கலந்து கொள்ளும்படி உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.**

**கிருபையின் கூடார அப்போஸ்தல சபை**

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909**

# நல்ல சமாரியன்

துயரத்தில் மூழ்கி மிகவும் இக்கட்டான சூழ்நிலையில், ஒரு தாயானவள் தவித்துக் கொண்டிருந்தாள். கடந்த மாதத்திலே ஏற்பட்ட இயற்கை அன ர்த்தத்தினால், அவளுக்கிருந்த சிறிய வீட்டை மாத்திரமல்ல, குடும்பத்தின் சில அங்கத்தவர்களையும், ஒரு சில வினாடிகளில், வெள்ளம் வாரிக் கொண்டு சென்றுவிட்டது. தாங்கொண்ணா துயரம்! இதை யாரிடம் கூறு வது? நாளைய நாளைக் குறித்து சிந்தித்துப் பார்க்கக்கூட அவளிடத் தில் பெலனில்லை. தன்னுடனே உயிர் பிழைத்திருக்கும், தன் சின்ன மக னுடன் பட்டணத்திலுள்ள தற்காலிக விடுதி ஒன்றிலே தஞ்சம் புகுந்து கொண்டாள். இந்த நிலையிலே, அவளுக்கு நிவாரணம் வழங்கும்படி யாக சில ஆவணங்களைக் கொடுத்து, இதை சரியான முறையிலே நிர ப்பி, குறிப்பிட்ட திகதிக்கு முன்னதாக, குறித்த இடத்திலே சமர்ப்பிக்க வேண் டும் என்று ஒருவர் அவளிடம் சில ஆவணங்களை கொடுத்தார். அந்த நபருடைய ஆதங்கம், தொண்டு செய்யும் ஸ்தாபனத்தின் விதி முறைகளின்படி நன்மையானதாக இருக்கலாம், ஆனால், தன் வாழ் வைக் குறித்து எண்ணமற்றிருக்கும் அந்த தாயானவளின் நிலையில் இது சரியாகுமா? இல்லை!

**கர்த்தராகிய இயேசு இந்த உலகிலே வாழ்ந்த நாட்க ளிலே, ஒடுக்கப்பட்டவர்களையும், வாழ்விழந்தவர்களை யும், கைவிடப்பட்டவர்களையும் தேடிச் சென்றார்.**

ஒரு சமயம் முப்பத்தெட்டு வருஷம் வியாதிகொண்டிருந்த ஒரு மனுஷன், ஆலய மண்டபத்தின் ஒரு பகுதியிலே இருந்த பெதஸ்தா எனப்பட்ட குளத்தின் அருகே இருந்தான். அவனை கருணைத் தெய்வமாகிய இயேசு கண்டு, அவன் வெகுகாலமாய் வியாதியஸ்தனென்று அறிந்து, அவனை நோக்கி எழுந்திரு, உன் படுக்கையை எடுத்து க்கொண்டு நட என்றார். உடனே அந்த மனுஷன் சொஸ்தமாகி, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு, நடந்துபோனான். அந்த நாள் ஓய்வுநாளாயிருந்தது. அவன் குணமடைந்ததை குறித்து, தேவனை ஆராதிப்பதற்கு பதிலாக, அங்கிருந்த யூத மதத் தலைவர்களும், மக்களும் அவனுக்கு உதவி செய்ய மனதில்லாமல், அவன் குணப்பட்ட நாள் ஓய்வு நாளாக இருந்தபடியால், அவனை நோக்கி: இது ஓய்வு நாளாயிருக்கிறதே, படு க்கையை எடுத்துக்கொண்டு போகிறது உனக்கு நியாயமல்ல என்றா ர்கள். இவர்கள் தேவனுடைய நியமங்களைக் குறித்து தப்பான எண் ணங் கொண்டிருந்தார்கள். தன் வாழ்க்கையில் அற்புதம் நடக்கும் படி யாக அந்த குளத்தில் முந்தி இறங்குவதற்கு அவனுக்கு பெலனில்லை. அநேகமாயிரம் தேவ ஜனங்கள் அந்த இடத்தில் போக்கும்வரத்துமாக இருந்தும். இந்த மனிதனுக்கு உதவி செய்ய யாருமில்லை.

சற்றுசிந்தித்துப் பாருங்கள். தான் நேசித்த குடும்ப அங்கத்தவர்களை இழ ந்து, தவித்துக் கொண்டிருக்கும் அந்த தாயானவள் நிவாரணங்கள் கிடை க்கும்படி ஆவணங்களை நிரப்பிக் கொள்ளக்கூடுமோ? அல்லது விஷப் பாம்பு கடித்து மரித்துக் கொண்டிருக்கும் ஒரு வாலிபனிடம் அவனுடைய

தவறை சுட்டிக் காட்டும் கேள்விகளை கேட்பது மனித நேயத்திற்கு சரியாகுமோ? சாதாரண மனிதர்கள் கூட இதை ஏற்றுக் கொள்ளாதிருக்க, அன்பு நிறைந்த பரம பிதா மனமிரங்காமல் இருப்பாரோ? அவர் மனதுருக்கம் நிறைந்தவர்! அவர் நிச்சயமாக ஒடுக்கப்பட்டவர்களின் கண்ணீரை காண்கின்றவர். இப்படிப்பட்ட தேவனை தங்கள் தேவன் என்று கூறிய யூதமதத் தலைவர்களில் பெரும்பான்மையானோர், உதவியற்றிருக்கும் மனிதர்களுக்கு மனதுருக்கம் காட்டுவதற்கு பதிலாக, தங்களுக்கென பல சட்டதிட்டங்களை ஏற்படுத்திக் கொண்டு, அதை நிறைவேற்றுவதிலேயே பெருமிதம் அடைந்தார்கள்.

இந்த உலகிலே பாவ இருள் நிறைந்திருக்கின்றது உண்மை. தவறுகளும் ஒழுங்கீனங்களும் மலிந்து கொண்டு போவதும் மெய். கடைசி காலத்திலே இவைகள் நடக்கும் என்று வேதத்திலே முன்குறிக்கப்பட்டுள்ளது. (1 தீமோ 3:1-5). ஆனால் அந்த இருளிலே பிரகாசிக்கும்படியான மெய்யான ஒளியின் தீபங்களாக பரமபிதா எங்களை ஏற்படுத்தியிருக்கின்றார். எங்கள் வெளிச்சம் உலகத்திலே மனிதர்கள் முன்பாகப் பிரகாசிக்கவேண்டும். (மத்தேயு 5:14-16)

## எனவே, எங்கள் நற்கிரிகைகளை எங்கள் கொள்கைகளால் நாங்கள் மறைத்து வைக்கக்கூடாது.

நீதியின் வழியில் கிரமமாகவும் ஒழுங்காகவும் கிரியைகளை நடப்பிப்பது நல்லது. ஆனால் எந்த ஒரு ஒழுங்கு முறையும், ஒரு போதும் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு தடையாக மாறிவிடக் கூடாது. அப்படி தடையாக மாறினாலும், தேவன் நினைத்ததை மனிதன் தடுத்து நிறுத்த முடியாது. ஆனால், எவன் இடறலாக இருக்கின்றானோ அவன் தேவனோடு எதிர்த்து நிற்கின்றவனாக மாறிவிடுகின்றான். தேவனோடு எதிர்த்து நிற்கின்றவன், தன்னை அறியாமல், பிசாசின் தூதனாக மாறிவிடுகின்றான். கருப்பொருளாவது, தேவ அன்பிற்கு எல்லையை போடாதிருங்கள். தேசத்திலுள்ள, ஒடுக்கப்பட்டு வாழ்விழந்து, வழி தெரியாமல் இருக்கும் எல்லா ஜனங்களுக்கும் எங்களால் உதவி செய்ய முடியாது. ஆனால், நன்மை செய்ய அறிந்திருந்தும் நாங்கள் அதை எங்கள் கொள்கைகள் நிமித்தம் தடுத்து நிறுத்துவோம் என்றால் அது எங்களுக்கு பாவமாயிருக்கும். (யாக்கோபு 4:17)

தேவன்தாமே ஆசாரியத்துவத்தையும், ஆராதனை முறைகளையும் தாம் பிரித்தெடுத்த லேவி கோத்திரத்தாரிடம் கொடுத்திருந்தார். பல ஆண்டுகள் கடந்து சென்று வாக்களிக்கப்பட்ட மீட்பர் வரக்கால தாமதமான போது, இந்த ஆசாரியத்துவத்தையும், ஆராதனை முறைகளையும் பெற்றவர்கள், ஒடுக்கப்பட்டு, வாழ்விழந்து தவிக்கும் ஜனங்களை தேவனிடம் சேர்ப்பதைவிட, தங்கள் ஒழுங்கு முறைகளை மேன்மைப்படுத்துகின்றவர்களாக இருந்தார்கள். ஆசாரியத்துவத்தை பெற்றவர்கள், அன்றிருந்த உலகத்திலே பெரிய ஸ்தாபனமாக விளங்கினார்கள். ஆனால், தேவனோ, அந்த ஸ்தாபனத்தை அரோசித்தார். மீட்பருடைய வழியை ஆயத்தப்படுத்தும்படிக்கு தேவன் அந்த ஸ்தாபனத்தை தெரிந்து கொள்ளவில்லை. தன்னுடைய சத்தத்திற்கு கீழ்ப்படிக்கின்ற ஒரு மனிதனை தெரிந்தெடுத்தார். யோவான் ஸ்நானன் என்னும் மனிதன் கர்த்தராகிய

இயேசுவுக்கு வழியை ஆயத்தப்படுத்தும்படி ஒருவனாக வந்தான். (லூக்கா 3:1-18)

## மனிதர்களை ஏமாற்றுகின்றவர்களின் நிமித்தமாக ஏழை களை, திடனற்றவர்களை, ஒடுக்கப்பட்டவர்களை, வாழ் விழந்தவர்களை, திக்கற்றவர்களை, விதவைகளை மற ந்து போய்விடாதிருங்கள்.

சில வேளைகளிலே நாங்கள் செய்யும் சில உதவிகள் சில ஏமாற்றுக் காரரிடத்தில் போய் சேர்ந்து விடலாம். அதனால், உங்களில் இருக்கும் மெய்யான தீபத்தை மரக்காலால் மூடிவிடாதிருங்கள். நீங்கள் பெற்ற உன்னதமான தேவ அன்பை பகிர்ந்து கொள்ள மறந்து போய்விடாதி ருங்கள். தேவனை அன்பு செய்கின்றவன், தன் அயலவனை நிச்சயமாக அன்பு செய்வான். உன்னைப் போல் உன் அயலானையும் அன்பு செய்வாயாக என்பது நாங்கள் பெற்ற ராஜரீகமான கட்டளை.

நல்ல அயலவன் யார் என்பதை நாங்கள் நன்கு புரிந்து கொள்ளும்படி யாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாமே ஒரு சம்பவத்தை விளக்கிக் கூறினார். ஒரு மனுஷன் எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போகையில் கள்ளர் கையில் அகப்பட்டான் அவர்கள் அவன் வஸ்திரங்களை உரிந்து கொண்டு அவனைக் காயப்படுத்தி, குற்றுயிராக விட்டுப் போனார்கள். அந்த வழியாய் வந்த ஆசாரியனும், பின்பு வந்த லேவியனும் அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப்போனார்கள்.

அந்த ஆசாரியனும் (இவர்கள் லேவியரில் ஒரு பகுதியினர், தேவனுக்கு ஆராதனை செலுத்த நியமிக்கப்பட்டவர்கள்) லேவியனும் (தேவனை ஆராதனைக்கு உதவி செய்கின்றவர்கள்) செய்தது தவறு என்று, இன்று நாங்கள் கூறிக் கொள்கின்றோம். ஆனால் இன்று பல மனிதர்கள் இப்படியான சூழ்நிலையில் என்ன கூறிக் கொள்கின்றார்கள்?

அவன் பாவியா? பரிசுத்தவானா? அவன் எந்த கோத்திரத்தான்? அவன் செல்வந்தனா? அல்லது ஏழையா? இவனுக்கு உதவி செய்தால் சமுதாயம் என்னைக் குறித்து என்ன கூறும்? நான் அழுக்கடைந்து விடுவேன் அல்லவா? அவனுடைய பிரயாணம் தேவனுக்கு சித்தமா? சித்தமில்லையா? அவன் தனியே சென்றானா? வழியிலே கள்வர்கள் இருப்பார்கள் என்று அவனுக்கு தெரியாதா? எந்த நேரத்திலே அவன் சென்றான்? இவனுக்கு உதவி செய்தால் என்னுடைய பாதுகாப்பு என்ன ஆவது? நாங்கள் ஞானமாக நடந்து கொள்ள வேண்டும் அல்லவோ? எனப் பலவிதமான கோணங்களில் மனதில் கூறிக்கொள்பவர்களுமுண்டு.

அந்த வழியாய் சமாரியன் ஒருவன் பிரயாணமாய் வருகையில், அவ னைக் கண்டு, மனதுருகி, கிட்ட வந்து, அவனுடைய காயங்களில் எண்ணெயும் திராட்சரசமும் வார்த்து, காயங்களைக் கட்டி, அவனைத் தன் சுயவாகனத்தின்மேல் ஏற்றி, சத்திரத்துக்குக் கொண்டுபோய், அவ னைப் பராமரித்தான். மறுநாளிலே தான் புறப்படும்போது இரண்டு பண த்தை எடுத்து, சத்திரத்தான் கையில் கொடுத்து: நீ இவனை விசாரித்து

க்கொள், அதிகமாய் ஏதாகிலும் இவனுக்காகச் செலவழித்தால், நான் திரும்பிவரும்போது அதை உனக்குத் தருவேன் என்றான்.

இந்த நல்ல சமாரியன் யாரைக் கண்டான்? உதவியற்ற நிலையில் மரித்துக் கொண்டிருக்கும் ஒரு ஆத்துமாவைக் கண்டான். சற்றும் தாமதமின்றி, எந்தவித தயக்கமுமின்றி, தன்னுடைய அன்பை அந்த அந்நியனுக்கு வெளிக்காட்டினான்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில், அந்த வழியாய் நாம் வரும் போது, குற்றுயிராக இருக்கும் மனிதனை கடந்து செல்ல நேரிட்டால், அந்த மனிதனைக் கண்டவுடன், எங்கள் மனதில் தோன்றும் நினைவுகள் தேவனுக்கு ஏற்புடையதாக இருக்கின்றதா என்பதை ஆராய்ந்து பார்த்து எங்கள் நிலையை நாங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகாரக ஏற்றுக் கொள்ள முன்பு நாங்கள் இந்த உலக அளவு கோலின்படி உயர்ந்தவர்களாகவோ, தாழ்ந்தவர்களாகவோ, கல்விமான்களாகவோ, கல்வி கற்காதவர்களாகவோ, ஐஸ்வரியவான்களாகவோ, ஏழைகளாகவோ அல்லது எப்படியான நிலையிலுமிருந்திருக்கலாம். நாங்கள் யாவரும் நித்திய நரக ஆக்கினையை நோக்கி சென்று கொண்டிருந்தோம். அந்த நிலையிலே நல்ல சமாரியன் இயேசு எங்கள் வாழ்வில் வந்தார்.

நீ எத்தனை பாவங்கள் செய்தாய்? எவ்வளவு காலமாய் தவறான வழியில் வாழ்ந்தாய்? நீ எந்த கோத்திரத்தான்? நீ ஏழையா? பணக்காரனா? கல்விமானா? கற்றறியாதவனா? என்று எந்த கேள்விகளும் இல்லாமல், தம் அன்பை எங்கள் மேல் பொழிந்தார். அழிந்து போகாமல் மீட்டுக் கொண்டார். அவர் நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார். பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது. மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார்.

## அந்த தெய்வீக அன்புக்கு எல்லையை போடாதிருங்கள். உங்களை சூழ இருக்கின்றவர்கள் மேல் இரக்கமுடையவர்களாக இருங்கள். தாராளமாய் உதவி செய்யுங்கள்.

அப்படியாக உதவி செய்ய உங்களிடம் பெலனோ, நிர்வாகவோ இல்லாதிருந்தால், அவர்களுக்கு ஆதாரமாயிருங்கள். அவர்களுக்காக கருத்தோடு ஜெபியுங்கள்.

**இருதயத்தை ஆராய்ந்தறிகின்ற தேவன், உங்களை வழிநடத்திச் செல்வாராக! ஆமேன்!**

# இருளின் அதிகாரத்திலிருந்து விடுதலை

**பிரசங்கக் குறிப்புக்கள்** - போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்

**[IF YOU WOULD LIKE TO LISTEN TO THE FULL VERSION OF THIS MESSAGE IN ENGLISH OR TAMIL, FOLLOW THE LINK THAT IS PROVIDED AT THE END THIS SERMON NOTES]**

## பிரதான வசனம் : 1 யோவான் 3:2

இந்த உலகத்திலே யார் எல்லோரையும் ஏற்றுக் கொள்ளுகின்றார்கள் என்று கேள்வியை கேட்கும் போது, இயேசுவே எங்கள் யாவரையும் ஏற்றுக் கொள்ளுகின்றார் என்று கூறுவோம். அது சத்தியம். பிசாசானவனும் தன்னோடு யாவரையும் சேர்த்துக் கொள்ள விரும்புகின்றான். ஆனால் அவனுடைய நோக்கம் வேறுபட்டதாக இருக்கின்றது. இயேசு சொன்னார்: திருடன் (பிசாசானவன்) திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன். மனித குலம் நித்தியமான வாழ்வை பெறும்படிக்காய் இயேசு விரும்புகின்றார். ஆனால் பிசாசானவனோ, மனிதர்கள் யாவரும் தன்னோடு கூட நித்திய ஆக்கினைக்குள்ளாகும்படி சதி செய்கின்றான்.

உங்கள் எண்ணப்படி நீங்கள் உங்கள் ஆசை இச்சைகளை நிறைவேற்றுங்கள். அப்படி நீங்கள் செய்கின்றவைகளை நியாயப்படுத்துங்கள் என்பதே அந்த பொல்லாங்கனாகிய பிசாசானவனின் உபதேசம். இதனால் அநேகமாயிரம் பேர்கள் அவனை பின்பற்றிப் போகின்றார்கள். எடுத்துக் காட்டாக, இருவர், ஒருவருக்கு ஒருவர் அடித்து, சண்டை போட்டுக் கொண்டிருந்தால், அவர்களின் இஷ்டப்படி அவர்களை இன்னுமதிகமாக சண்டை செய்யும்படி ஊக்குவித்து, அவர்கள் இருவரையும் தன் பக்கமாய் ஏற்றுக் கொள்ளுபவனே, அந்த எதிராளியாகிய பிசாசானவன்.

பாவத்தின் சம்பளம் மரணம் தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்.

இந்த நித்திய ஜீவன் இயேசுவாலே மாத்திரம் உண்டாயிருக்கின்றது. அவர் யாவரும் தன்னிடம் வரும்படியாய் விரும்புகின்றார். தன்னிடத்தில் சேருகின்ற யாவருக்கும் நித்திய ஜீவனை அளிக்கின்றார்.

தேவ ஊழியராகிய பவுல், இயேசு கிறிஸ்துவின் சித்தம் என்ன என்பதையும் அவர் கொடுத்த பரம தரிசனத்தைக் குறித்தும் ரோம அதிகாரிகளுக்கு இவ்வாறு விளக்கிக்கூறினார். “அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளும்படியாக, அவர்கள் இருளை விட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டு தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும்பொ



gtachurch.ca

ருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்றார்."

இன்று பலர் தேவனுடைய அழைப்பையும் வாக்குத்தத்தங்களையும் தங்கள் சொந்த இலாபத்திற்காகவும், தங்கள் நடக்கைகளை நியாயப்படுத்தி பாதுகாக்கும் ஆயுதங்களாகவும் பாவித்துக் கொள்ளுகின்றார்கள். தேவன் தம்முடைய பிள்ளைகள் மேல் கொண்ட அன்பின் நிமித்தம், நன்மையான ஈவுகளை கொடுத்திருக்கின்றார். அவர் எங்களை நம்பி தந்த பொறுப்புகளை நாங்கள் அவருடைய சித்தப்படி செய்யாமல், அதை தவறான முறையில் உபயோகிப்போமாக இருந்தால், நாங்கள் தேவனை அவமதிக்கின்றவர்களாக இருப்போம்.

அப்படியானால் தேவன் கொடுத்திருக்கும் ஆசீர்வாதங்களும், அவருடைய ஜீவனுள்ள வாக்குத்தத்தங்களும் எதற்காக கொடுக்கப்பட்டிருக்கின்றது?

ஆதிப் பெற்றோராகிய ஆதாம் ஏவாள் சிருஷ்டிக்கப்பட்ட போது, பிசாசின் இருளின் அதிகாரத்திற்கு உட்பட்டவர்களாக இருக்கவில்லை. அவர்கள் எப்போது, தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல், பிசாசாசின் சத்தத்திற்கு செவி கொடுத்தார்களோ, அன்று அவர்கள் பிசாசின் இருளின் அதிகாரத்திற்கு உட்பட்டவர்களானார்கள். அவர்கள் பாவம் செய்யத்தக்க சுபாவமுடையவர்களானார்கள். இந்த சுபாவத்திற்கு ஒருவன் கீழ்ப்படிகின்றவனாயிருக்கின்ற போது அவன் பிசாசின் இருளின் அதிகாரத்திற்கு உட்பட்டவனாயிருக்கின்றான். அதன் முடிவோ நித்திய ஆக்கினை. இதற்காக பிசாசானவன் தன்னிடம் வரும்படி யாவரையும் ஏற்றுக் கொள்கின்றான்.

பாவ இருளிலே வாழும் மனிதர்கள் இருளைவிட்டு தம்முடைய தெய்வீக ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அடிமைத்தனத்திற்கு உட்பட்டிருக்கும் ஜனங்களை அவனுடைய பாவ அதிகாரத்தைவிட்டு விடுதலையாக்கி தேவனிடத்திற்கு திரும்பும்படிக்கும், குருடுபட்டிருக்கும் மனக் கண்கள் திறக்கும்படிக்கும், நாங்கள் யாவரும் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய நித்தியமான சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளும்படியாக அவர் தெய்வீக ஆசீர்வாதங்களையும் வாக்குத்தத்தங்களையும் அனுக்கிரகம் செய்திருக்கின்றார்.

பரலோக ராஜ்யமே எங்கள் இறுதியான இலக்கு என்ற அறிவை கொண்டவர்களாக நாங்கள் வாழ வேண்டும். இந்த உலகிலே, எங்கள் வாழ்க்கையிலே அல்லது எங்களை சுற்றிலும் என்ன காரியங்கள் நடந்தாலும், எங்கள் கண்களை அந்த பரம இலக்கை விட்டு அகற்றிவிடக் கூடாது.

பிசாசின் இருளின் அதிகாரத்தினின்று விடுதலையாகி, பரலோகத்திலே தம்முடன் நித்தியமாய் வாழும்படிக்கு, தேவன் யாவரையும் தன்னிடம் வரும்படியாய் விரும்புகின்றார்.

**[இந்த தேவ செய்தியின் முழுமையான ஒலிப்பதிவை பின்வரும் இணையத் தளத்தில் (INTERNET WEBSITE இல்) தமிழ் ஆங்கில மொழிகளில் கேட்கலாம்.]**

# தாங்கி அரவணைக்கும் அன்பு

தேவன் எங்கள் மேல் கொண்ட அன்பை வெளிப்படுத்தும்படியாய் பல ஒப்பனையான சம்பவங்களையும் மற்றும் உவமைகளையும் நாங்கள் பரிசுத்த வேதாகமத்திலே காணலாம். தாய் தன் கர்ப்பத்தின் பிள்ளையை மறந்து போனாலும் நான் உன்னை மறந்து போவதில்லை. ஒரு தகப்பன் தன் பிள்ளைகளை தோளில் சுமப்பது போல எங்களை சுமக்கின்ற தகப்பன் அவர். இந்த ஒப்பனையான சம்பவங்களால் தேவனுடைய அன்பின் ஆழத்தை வர்ணிக்க முடியாது ஆனால் நாங்கள் அறிந்தவைகளை மையமாக வைத்து அவர் தம்முடைய அன்பின் ஆழத்தை எங்களுக்கு வெளிப்படுத்துகின்றார். இதற்கொத்ததாகவே, எப்படி ஒரு மணவாளனுக்கும் மணவாட்டிக்கும் தூய அன்பு இருக்கின்றதோ, அதே போல அவருடைய அன்பும் எங்கள் மேல் இருக்கின்றது. மணவாட்டி மணவாளனுக்காக ஆவலோடு காத்திருக்கும் அந்த தன்னிகரில்லாத தூய அன்பி ற்கு ஒத்ததாக எங்கள் இருதயமும், எங்கள் கர்த்தரை வாஞ்சிக்க வேண்டும். மணவாட்டி சபையாகிய எங்கள் அன்பு, மணவாளனாகிய இயேசு கிறிஸ்துவின் மேல் பெருக வேண்டும். இந்த தனி ரக நேசத்தை உன்னதப்பாட்டு என்னும் புத்தகத்திலே மனிதர்கள் புரிந்து கொள்ளும் வகையில் ஒப்பனையாக எழுதப்பட்டிருக்கின்றது. எப்படியாக இந்த உலகம் தன் மாம்ச கண்களால் மணவாட்டியைப் பார்த்து அவள் குறைவுள்ளவள் என்று கணித்தாலும், நேசராகிய இயேசு எங்கள் இருதயத்தை ஆராய்ந்து பார்த்து, தம்முடைய வழிகளிலே நடக்கும் தம்முடைய ஜனங்களைப் பார்த்து என் மணவாட்டி சபையே நீ பூரண ரூபவதி, உன்னிலே பழுது ஒன்றும் இல்லை என்று கூறுகின்றார். அவருடைய கரத்தின் கிரியைகளாகிய எங்களை, அவருடைய அரவணைக்கும் கரங்கள் தாங்கி, தேற்றி, நடத்துகின்றது. அவர் இடதுகை என் தலையின் கீழிருக்கும், அவர் வலதுகை என்னை அணைக்கும். இந்த அன்பு இந்த உலகத்தினால் உண்டானது அல்ல. இது தெய்வீக அன்பு! என்றும் மாறாததும், தணிந்து போகாததுமான அன்பு. இந்த தூய்மையான அவரவணைக்கும் அன்பைப் பற்றி இந்த நாட்களிலே தியானம் செய்யுங்கள். எங்களை தாங்கி அரவணைக்கும் கர்த்தரின் அன்பில் ஆறுதல் அடையுங்கள்.

**உன்னதப்பாட்டு 2:6**

**அவர் இடதுகை என் தலையின்கீழ் இருக்கிறது அவர் வலதுகை என்னை அணைத்துக் கொள்ளுகிறது.**

**ஜெபம்**: அன்பின் பரலோக தேவனே, உம்முடைய அணைக்கும் அன்புள்ள கரங்களுக்காக நன்றி! இந்த தெய்வீக அன்பிலே நான் வளரும்படிக்கு என்னை வழிடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அவர் சமுகம் பேரின்பம்

தேவன் தாமே தம்முடைய இருதயத்திற்கு பிரியமானவன் என்று அழைத்த தாவீது ராஜா, தான் தேவன் பேரில் கொண்ட அன்பை வெளிப்படுத்தும்படி பல சங்கீதங்களை எழுதியிருக்கின்றார். இவர் தன் தகப்பனின் வீட்டில் இளையவனாக இருந்தார். தன் தகப்பனுக்கிருந்த கொஞ்ச ஆடுகளை மேய்த்து வந்தார். பின்பு இவரை, தேவன் தாமே இஸ்ரவேல் முழுவதற்கும் ராஜாவாக உயர்த்தினார். இந்த உலகத்திலே மனிதன் தன் மாம்சத்திலே அனுபவிக்கக் கூடிய இன்பங்கள் யாவையும் இவருக்கு தாராளமாக இருந்தும், "உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு" என்று தேவனுடைய சமுகத்தையே நாடித் தேடினார். தான் தேவன் பேரில் கொண்ட நேசம் எவ்வளவு பெரியதும் ஆழமுமானது என்று வெளிப்படு த்தும்படிக்கு பல ஒப்பனையான காரியங்களைக் கூறியுள்ளார். "மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது. வறண்டதும் விடாய்த்ததும் தண்ணீரற்றதுமான நிலத்திலே என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது, சுவையான உணவை உண்டு திருப்தியாவது போல என் ஆத்துமா உம்மில் திருப்பதியாகின்றது, என் படுக்கையிலும் உம்மை நினைத்து இரா சாமங்களிலே தியானம் செய்வேன். என் ஆத்துமா உம்மைத் தொடர்ந்து பற்றிக்கொண்டிருக்கிறது உமது வலதுகரம் என்னைத் தாங்குகிறது. ஆயிரம் நாளைப்பார்க்கிலும் உமது பிராகாரங்களில் செல்லும் ஒரே நாள் நல்லது. ஆகாமியக் கூடாரங்களில் வாசமாயிருப்பதைப்பார்க்கிலும் என் தேவனுடைய ஆலயத்தின் வாசற்படியில் காத்திருப்பதையே தெரிந்துகொள்ளுவேன்." இப்படியாக தேவன்மேல் கொண்டுள்ள நேசத்தையும், அதனால் உண்டாகும் இதய வாஞ்சையையும், ஆனந்தத்தையும் பேரின்பத்தையும் திருப்த்தியையும் குறித்து தாவீது ராஜா பல சங்கீதங்களை பாடியிருக்கின்றார். இந்த சரீரம் இந்த பூமியோடு ஒழிந்து போகும் ஆனால் ஆத்துமா தேவனுடைய வீட்டிலே நித்திய பேரின்பத்தை அடையும். அந்த பேரின்பமானது நிகரில்லாதது. இந்த உலகத்திலுள்ள எந்த உறவினாலும் உண்டாகும் இன்பத்தையும் விட மேன்மையானது.

**சங்கீதம் 84:1**

**சேனைகளின் கர்த்தாவே, உமது வாசஸ்தலங்கள் எவ்வளவு இன்பமானவைகள்!.**

**ஜெபம்:** பரிசுத்தமுள்ள பரம தகப்பனே, உம்முடைய சமுகத்திலே வாசம் செய்யும் பேரின்பத்தை நான் வாஞ்சித்து அதையே நாடித் தேடத்தக்கதாக உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மணவாட்டி சபை

பழைய ஏற்பாட்டில் வாழ்ந்த தேவ பக்த்தர்கள் மாத்திரமல்ல, இயேசு இந்த பூமியிலே வாழ்ந்த நாட்களில் இருந்து இன்றுவரை, தேவ தாசர்கள், தாங்கள் தேவன்மேல் கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்தி வருகின்றார்கள். உன்னதப்பாட்டின் புத்தகத்திலே, ஒரு மணவாளன் தன் மணவாட்டியை பார்த்து, என் பிரியமே, உத்தமியே, ரூபவதியே என்று அழைப்பது போல, கர்த்தர் தம்முடையவர்கள் மேல் வைத்திருக்கும் நேசத்தை வெளிப்படுத்தியிருக்கின்றார். அவருடைய நற்செய்தியின் மையப்பொருளில் அன்பே பிரதானமானது என்று வலியுறுத்திக் கூறி, அதை நடைமுறையிலே செய்து காண்பித்தார். ஒரு சமயம், கர்த்தருடைய சீஷர்கள் ஏன் உபவாசிப்பதில்லை என்று யூத மதத் தலைவர்கள் முறுமுறுத்த போது, கர்த்தர் அவர்களை நோக்கி: மணவாளன் தங்களோடிருக்கையில் மணவாளனுடைய தோழர்களை நீங்கள் உபவாசிக்கச் செய்யக்கூடுமா? மணவாளன் அவர்களை விட்டு எடுபடும் நாட்கள் வரும், அந்த நாட்களிலே உபவாசிப்பார்கள் என்றார். இப்படியாக மணவாளனாகிய தன்னைக் குறித்து இயேசு வெளிப்படையாக கூறினார். பரலோகராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு மணவாளனுக்கு எதிர்கொண்டுபோகப் புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும். பரலோகராஜ்யம் தன் குமாரனுக்குக் கலியாணஞ்செய்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது. என்று கர்த்தராகிய இயேசு உவமைகள் வழியாக கூறினார். மேலும், வெளிப்படுத்தல் தீர்க்கதரிசன புத்தகத்திலே நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய (சிலுவையில் தம்மை கொடுத்த இயேசுவின்) கலியாணம் வந்தது, அவருடைய மனைவி (மணவாட்டி சபையாகிய நாங்கள்) தன்னை ஆயத்தம் பண்ணினாள் என்று சொல்லக் கேட்டேன். எனவே, கறைதிறை அற்ற மணவாட்டி சபையாக நாங்கள் கர்த்தரின் முன்னிலையில் நிற்கும் படியாக, இந்த நாட்களிலே எங்கள் வாழ்க்கையை பரிசுத்தத்தோடு காத்துக் கொள்வோம். அவருடைய நாளுக்காக ஆயத்தப்படுவோம்.

**வெளி 21:2**

புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தை தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கிவரக் கண்டேன் அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது.

**ஜெபம்:** சர்வ வல்லமையயுள்ள தேவனே, கர்த்தருடைய வருகையின் நாளுக்காக என் ஆத்தும வாஞ்சை பெருகும்படிக்காக பரிசுத்தமான வாழ்க்கை வாழ எனக்கு உதவி செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வானவருடைய சாயல்

உயிர்த்தெழுதல் இல்லை என்று சாதிக்கிற சதுசேயர் இயேசுவிடம் வந்து, போதகரே, ஒருவன் திருமணமாகி பிள்ளைகள் இல்லாமல் மரித்துப்போய் அதன் பின், யூதர்களின் பிரமாணத்தின்படி அவன் சகோதரர்கள் அவளை திருமணம் செய்தும் பிள்ளைகள் இல்லாமல் மரித்துப் போனால், உயிர்த்தெழுதலில், அவன் சகோதரரில் எவனுக்கு அவள் மனைவியாயிருப்பாள்? அவர்களெல்லாரும் அவளை விவாகம் பண்ணியிருந்தார்களே என்று கேட்டார்கள். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாததினாலல்லவா தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள்? மரித்தோர் உயிரோடே எழுந்திருக்கும்போது கொள்வனையும் கொடுப்பனையும் இல்லை. அவர்கள் பரலோகத்தில் இருக்கிற தேவ தூதரைப்போலிருப்பார்கள் என்றார்.

**மத்தேயு 22:29**

**நீங்கள் வேதவாக்கியங்களையும் தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள்.**

எப்படியாக சூரிய காந்தியின் விதை மண்ணில் விழுந்து முளைக்கின்றது? அந்த மரத்திற்கும் அதன் பூவிற்கும் தேவன் தம்முடைய சித்தத்தின்படி அழகான மேனியை கொடுத்திருக்கின்றார். மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும். அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும் கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும் பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும். ஜென்ம சரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும் ஜென்ம சரீரமுமுண்டு, ஆவிக்குரிய சரீரமுமுண்டு. அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து. பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அந்தப்படியே அழிந்து போகின்ற இந்த பூமிக்குரிய எங்கள் சரீரம் அழிந்து போகும். உயிர்தெழும்போது பரலோக மேனியைத் தரித்து, கிறிஸ்துவின் சாயலில் நாங்கள் திருப்தியாவோம். மண்ணாணவன் மண்ணுக்குரிய பிரகாரமாய் சிந்திக்கின்றான். விண்ணுக்குரியவன் விண்ணகத்திற்குரிய பிரகாரமாய் சிந்திப்பான். கிறிஸ்துவின் ஆவி எங்களில் இருப்பதால் எங்கள் சிந்தை அவரைப் போல புதிதாக்கப்படட்டும். கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாய் இருப்போமாக.

1 கொரிந்தியர் 15:12-58 ஐ இந்த தியானத்தோடு வாசியுங்கள்

சதுசேயர் என்பவர்கள் யூத மதத் தலைவர்களின் ஒரு பிரிவினர்.

**ஜெபம்**: அன்பின் தேவனே, அழிந்து போகின்ற இந்த பூமிக்குரிய சிந்தையை களைந்து, விண்ணகத்திற்குரிய சிந்தையிலே வளரும்படிக்கு எனக்கு ஞானத்தின் ஆவியை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அப்போஸ்தலனாகிய பவுல்

கர்த்தருடைய நற்செய்தியை அறிவிப்பதற்காக தன்னை முழுமையாக ஒப்புக் கொடுத்த அப்போஸ்தலராகிய பவுல் (முன்பு சவுல் என அழைக்கப்பட்டவர்), யூத மதத்தின்படி பரிசேயர் என்ற குழுவைச் சேர்ந்தவர். இவர் யூத பிரமாணங்களை நன்றாக கற்றறிந்தவர். அந்நாளிலே இருந்த கௌரவமிக்க ரோம ராஜ்யத்தின் பிரஜையாக இருந்தார். மதத் தலைவர்கள் மத்தியிலே செல்வாக்கு உள்ளவராக இருந்த இவர், யூத மத பிரமாணங்களின்படி குற்றம் சாட்டப்படாதவர். இப்படியாக சகல விதத்திலும் செல்வாக்குள்ளவாராக இருந்த இவர் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகின்ற அறிவின் மேன்மைக்காக, இவைகள் யாவையும், நஷ்டம் என்றும் குப்பை என்றும் தள்ளிவிட்டார். “கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே.” என்று கர்த்தர் அவர்மேல் வைத்திருக்கும் அன்பையும், அவர் கர்த்தர் மேல் வைத்திருக்கும் அன்பையும் குறித்து திடமனதோடு அறிக்கையிட்டார். மேலும் அவர் கூறுகையில், மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன் என்றார். சற்று சிந்தித்துப் பாருங்கள்! எத்தகைய அன்பின் பிணைப்பு இது? கர்த்தர் இவர்மேல் கொண்ட அன்பும், இவர் கர்த்தர் மேல் வைத்திருக்கும் அன்பும், இந்த உலக பிரமாணங்களின்படியாக மனிதர்களுக்கிடையில் இருக்கும் எந்த உறவுக்கும் அப்பாற்பட்ட அன்பு. இது மேலான தெய்வீக அன்பு! இந்த தேகத்தைவிட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு, அது அதிக நன்மையாயிருக்கும் என வாஞ்சையாக இருந்தார். பிரியமானவர்களே, கிறிஸ்து எங்கள் மேல் கொண்டிருக்கும் அன்பை வேறு எந்த காரியங்களும் பிரிக்க முடியாது. பவுலைப் போல நாங்கள் கிறிஸ்துவில் கொண்டுள்ள அன்பில் வளர்ந்து பெருகுவோம்.

**ரோமர் 8:36**

கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்?

அப்போஸ்தலன் என்பதற்கு அனுப்பப்பட்டவர்கள் என்பது பொருள்

பரிசேயர் என்பதற்கு பிரிக்கப்பட்டவர்கள் என்று பொருள்.

**ஜெபம்**: பரிசுத்தமுள்ள தேவனே, அப்போஸ்தலனாகிய பவுல் என்பவரைப் போல நானும் கிறிஸ்துவின் அன்பில் தினமும் வளரும்படிக்காக வாஞ்சையையும் கிருபையும் தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

செவ்வாய் | ஆவணி 6 | 📖 மாலை வாசகம் – மத்தேயு 7:16–20

# அன்பில் நிலைத்திருங்கள்

ஒரு மரத்தின் கனியின் சுவை நாளுக்கு நாள் மாறிக் கொண்டிருக்க கூடுமோ? நாங்கள் தேவன் மேல் கொண்டிருக்கும் அன்பும், உடன் சகோதரர் மேல் கொண்டிருக்கும் அன்பும், நாங்கள் பிறர்மேல் கொண்டிருக்கும் அன்பும், சூழ்நிலைகளின் அடிப்படையில் மாற்றமடைந்து போகும் என்றால், அந்த அன்பு இந்த பூமிக்குரிய அன்பாக இருக்கும். கர்த்தருக்கு பிரியமான சீஷனாகிய யோவான் என்பவர், தெய்வீக அன்பின் முக்கியத்துவத்தை மிகவும் தெளிவாக எடுத்துரைத்துள்ளார். “பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம் ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது. அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான். அன்பில்லாதவன் தேவனை அறியான், தேவன் அன்பாகவே இருக்கிறார். தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை. நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால் **தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார்**”. நேற்று என்னுடைய மனநிலை சரியில்லை எனவே நான் என்னுடைய உணர்வுகளின்படி மற்றவர்களுடன் பேசிக் கொண்டேன். இன்று என்னுடைய மனோநிலை நன்றாக இருக்கின்றது எனவே நான் இனிமையாக பேசிக் கொள்ளுவேன் என்று நாங்கள் நாளுக்கு நாள் மாற்றமடைவது தெய்வீக அன்பு அல்ல. முட்செடிகளில் திராட்சப்பழங்களையும், முட்பூண்டுகளில் அத்தி ப்பழங்களையும் பறிக்கிறார்களா? அப்படியே நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும் கெட்ட மரமோ கெட்ட கனிகளைக் கொடுக்கும். நேற்று அன்புள்ள நண்பனாக இருந்த ஒருவன் இன்று பகைஞனாக மாறிவிடலாம். மாறிப்போனவன் பகைஞனாகவே இருப்பேன் என்று தன் இருதயத்திலே கசப்பை வளர்ப்பானாக இருந்தால், தேவ அன்பு அவனிடத்தில் இருக்காது, அங்கே தேவன் நிலைத்திருக்கமாட்டார். எனவே அந்த இருதயத்திலே தேவ சமாதானத்திற்கு இடமில்லை. மற்றவன் பகைஞனாக மாறிவிட்டதால் என்னுடைய சுபாவமும் மாறிவிடக்கூடாது. நான் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப்போல இருக்க வேண்டும். கர்த்தருடைய வேதத்தில் பிரியமாக இருந்து, அதைத் தியானியுங்கள், வாஞ்சியுங்கள், தேவன் அன்பில் பெருகச் செய்வார்.

**1 யோவான் 2:10**

**தன் சகோதரனிடத்தில் அன்புகூருகிறவன் ஒளியிலே நிலைகொண்டிருக்கிறான்; அவனிடத்தில் இடறல் ஒன்றுமில்லை.**

**ஜெபம்:** அன்பின் பரலோக தேவனே, பரலோகத்திலிருந்து வரும் நிறைவான அன்பில் நான் நாளுக்கு நாள் வளர்ந்து நிலையான சுவையான கனியை கொடுக்கும்படி என்னை வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# யாரும் அறியாத அன்பு

ஒரு இளவரசனின் மெய் பாதுகாவலனுக்கு, தான் தேசத்தின் முடிக்குரியவரை நான் பாதுகாக்கின்றேன் என்னும் மகிழ்ச்சி அவன் இருதயத்தில் இருக்கும். தன் உயிரைக் கூட தியாகம் செய்ய வேண்டிய நிலை வந்தாலும், இளவரசன் வாழ வேண்டும் என்பதற்காக அவன் தயங்காமல் தன்னை தியாகம் செய்வான். அந்த இளவரசன் இந்த மெய் பாதுகாவலனிலும் மேலானவன். ஒரு வேளை அந்த மெய்பாதுகாவலன் தன் உயிரை இளவரசனுக்காக தியாகம் செய்தால், அவன் உயிரோடிருக்கும் போது பெற்ற கனத்தைவிட, வீரமரணம் அடைந்த பின் பெரிதான கனத்தை அடைவான். ஆனால் தேசத்திலே இருக்கும் ஒரு ஏழைக் குடியானவனுக்காக ஒருவன் தன் உயிரைக் கொடுப்பானோ? இல்லை. அந்த ஏழை மரித்துப்போனாலும் அவன் கணக்கில் எடுக்கப்படுவதில்லை. ஆதாம் ஏவாள் வழியாக வந்த ஜென்ம பாவத்தினால், நாங்கள் யாவரும் கணக்கற்றவர்களாக இருந்தோம். எங்கள் முடிவு நித்திய மரணமாக இருந்தது. எங்கள் பாவ தோஷத்தை போக்க வழி ஏதும் இருக்கவில்லை. மீட்படைய வழி ஏதும் இல்லை! ஆனால் தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்கு தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. இவர் ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தர், சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று. உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. நானும் நீங்களும் வாழும்படிக்கு, அவர் தம்முடைய பரலோக மேன்மையை துறந்து, தாழ்மைக் கோலம் பூண்டார். என்ன ஆச்சரியமான அன்பு! நாங்கள் அவருடைய பரிசுத்த மணவாட்டி சபையாக மாறும்படிக்கு தம்மைப் பாவ நிவாரண பலியாக ஒப்புக் கொடுத்தார். எங்கள் மேய்ப்பரானார், எங்கள் மூத்த சகோதரரானார், எங்கள் நண்பரானார். எங்கள் தலைவனானார். எங்கள் ஆத்தும நேசரானார், எங்கள் மணவாளரானார். எங்களுக்கு அவர் எல்லாமானார்! இப்படியாக யாரும் அறியாத அவருடைய நிறைவான பரலோக அன்பை எங்கள் மேல் ஊற்றினார்.

**1 யோவான் 4:9**

தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்கு தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது.

**ஜெபம்**: அன்பின் பரலோக தந்தையே, நீர் எங்கள் மேல் காட்டுகின்ற தெய்வீக அன்பினை உணர்ந்து, அந்த நிறைவான அன்பை நான் மற்றவர்களுக்கு காட்டும்படிக்கு என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவனுடைய ஊழியர்கள்

உங்களுக்கு உணவூட்டும் கரங்களை காயப்படுத்தாதிருங்கள் என்று பொருட்படும்படியாய் ஆங்கிலத்திலே ஒரு பழ மொழி உண்டு. தேவன் மனித குலத்தின் மேல் கொண்ட அன்பினால், அவர்கள் நித்திய நரகத்திலே அழிந்து போகாமல் இருக்கும்படிக்கு இரட்சகரை அனுப்பினார். இரட்சகராகிய இயேசு, இரட்சிப்படையும் வழியை உண்டு பண்ணி, பரலோகம் சென்ற பின்பு, அந்த இரட்சிப்பின் நற்செய்தியை (சுவிசேஷத்தை) யாவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்று தம்முடைய ஊழியர்களை ஏற்படுத்தி அனுப்பிக் கொண்டே இருக்கின்றார். மனிதர்கள் யாவரும் நன்மை அடைய வேண்டும் என்பதற்காகவே அப்படிச் செய்தார். எடுத்துக் காட்டாக, ஒரு மனிதன் சுக தேகியாக வாழவேண்டும் என்ற நோக் குடன், அவன் எப்படியான ஆகார த்தை உண்ண வேண்டும், என்று சொல்லிக் கொடுக்கும் வைத்தியரை அந்த மனிதன் அசட்டை செய்து, அவரை துன்பப்படுத்துவானாக இருந்தால், அந்த மனிதனுடைய முடிவு பரிதவிக்கப்படத்தக்கது. அதே போல இந்த உலகத்திலே வாழும் போது, அந்த வாழ்க்கையின் நோக்கத்தை உணர்ந்து, அழிந்து போகின்ற இந்த உலக இன்பங்களு க்காக வாழ்வை அழித்துக் கொள்ளாமல், பரலோகத்திலே நித்திய வாழ்வை கண்டடையும் வழியை அறிவிக்கும் தேவ தாசர்களை துன்பப்படுத்துகின்றவர்கள், தங்கள் ஆத்துமாவை குறித்து கரிசனை யற்றிருப்பதால், தங்களுக்கு தாங்களே கேடுண்டாகும்படியாக அப்ப டிச் செய்கின்றார்கள். இவ்வண்ணமாகவே, தேவனை அறிந்த பிள்ளை களும் தேவ வார்த்தைகளைக் கேட்கும் போது அதைக் குறித்து எச்சரி க்கையாக இருக்க வேண்டும். உணவூட்டும் கரங்களை கடிக்கும் அடங்காத பிள்ளைகளை போன்ற மனநிலையுடையவர்களாக இருக்க க்கூடாது. உங்களுக்காக பிரயாசப்பட்டு, கர்த்தருக்குள் உங்களை விசாரணைசெய்கிறவர்களாயிருந்து, உங்களுக்குப் புத்திசொல்லுகிறவர் களை நீங்கள் மதிக்க வேண்டும். அவர்களை மிகவும் அன்பாய் எண்ணிக் கொள்ள வேண்டும். தேவனுடைய ஒழுங்கிற்கு எதிர்த்து நிற்காதபடிக்கு எச்சரிக்கையுள்ளவர்களாயிருங்கள். பொறுமையுடன் தொடர்ந்து ஓடுங்கள்.

**1 தெச 5:13**

**அவர்களுடைய கிரியை யினிமித்தம் அவர்களை மிகவும் அன்பாய் எண் ணிக்கொள்ளும்படி உங் களை வேண்டிக்கொள் ளுகிறோம்.**

**ஜெபம்**: நீதியின் தேவனே, உம்முடைய வார்த்தைகளை கொண்டு வரும் தாசர்களை கனத்துடன் ஏற்றுக் கொண்டு, அந்த வார்த்தைகளி ன்படி என் வாழ்வை நான் மாற்றிக் கொள்ள உணர்வுள்ள இருதயத் தைத் தாரும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவனிடம் சேருங்கள்.

இன்று உங்களை மனமடிவடையச் செய்யும் பிரச்சனை என்ன? சற்று சிந்தியுங்கள்! மனம் சோர்ந்து போகாதிருங்கள். நன்மை செய்யும் தேவன் எங்களோடு இருக்கின்றார். உங்களில் தகப்பனாயிருக்கிற ஒருவனிடத்தில் மகன் அப்பங்கேட்டால், அவனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக்கேட்டால் மீனுக்குப் பதிலாய்ப் பாம்பைக் கொடுப்பானா? அல்லது முட்டையைக் கேட்டால், அவனுக்குத் தேளைக் கொடுப்பானா? பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும் போது, பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்று இயேசு கூறியிருக்கின்றார். எனவே, விசுவாசத்தோடு, உங்கள் வேண்டுதல்களை தேவனிடத்திலே தெரியப்படுத்துங்கள். அற்பமானவனென்று ஒருவரையும் அவர் தள்ளிவிடுவதில்லை. சில வேளைகளிலே உங்களை எதிர்நோக்கும் சூழ்நிலைகள் பயங்கரமானதாக இருக்கலாம். ஒரு வேளை நான் செய்த தவறினால் நான் இந்த நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டேன். இதிலிருந்து யார் என்னை விடுதலையாக்கக் கூடும். என்ற சிந்தை தோன்றலாம் அல்லது இந்த எதிரியிடம் இருந்து யார் என்னை விடுதலையாக்கக் கூடும் என்ற எண்ணம் உண்டாகலாம். பயப்படாதிருங்கள்! தம்முடைய ஏக சுதனாகிய இயேசுவையே எங்களுக்காக கொடுத்தவர் எங்களோடிருக்கின்றார். மனத் தாழ்மையோடு அவரிடம் சேருங்கள். அவர் தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபை அளிக்கின்றார். அவர் தம்முடைய வாக்கில் உண்மையுள்ளவர். “நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன் என் நீதியின் வலதுகரத் தினால் உன்னைத் தாங்குவேன்” என்று தம்முடைய பிள்ளைகளுக்கு வாக்குரைத்தவர் எங்கள் நிலையை அறிந்தவராயிருக்கின்றார். கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர். எனவே திடநம்பிக்கையுடன் தேவனிடம் சேருங்கள்.

**ஏசாயா 41:10**

**நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன் திகையாதே, நான் உன் தேவன் நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன் என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்.**

**ஜெபம்**: சர்வ வல்லமையுள்ள தேவனே, என்னை நோக்கும் சூழ்நிலைகளை கண்டு, நான் பின்னிட்டு போகாமல், மனத் தாழ்மையுடன் உம்மிடம் கிட்டிச் சேரும்படி உம்மண்டை என்னை இழுத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சிறிய காரியங்கள்

என் பழைய வாழ்க்கையில் இருந்த பெரிதான காரியங்கள் யாவையும் தேவனை அறிகின்ற மேன்மைக்காக விட்டுவிட்டேன் ஆனால் இந்த சிறிய காரியம் மட்டுமே என்னிடம் இருக்கின்றது என்று சில சின்னச்சின்ன காரியங்களை மனிதர்கள் தங்களை விட்டு அகற்றிவிடுவதில்லை அல்லது அவை சிறிய காரியங்கள் தானே என்று பராமுகமாகவிட்டுவிடுகின்றார்கள். எடுத்துக்காட்டாக, பழைய பாவ பழக்கங்கள, மாம்ச சுபாவங்கள், தவறான பழைய நண்பர்கள அல்லது உறவுகள் போன்றவை என் வாழ்விற்கு என்ன செய்ய முடியும்? அவை அற்பமானவைகள் என எண்ணி தங்கள் வாழ்விற்குள் அவைகளை (அல்லது அவர்களை) அனுமதித்துவிடுகின்றார்கள். ஒரு தோட்டக்காரன் தன் திராட்சை தோட்டத்திலே மிகவும் பிரயாசப்பட்டு உழைத்தான். திராட்சை செடிகள் செழிப்பாக வளர்ந்து பூவும் பிஞ்சுமாக அழகாக காட்சியளித்திருந்தது. தன் பிரயாசத்தின் பலனை அறுக்கும் நாட்கள் அண்மித்துக் கொண்டிருந்தது. ஆனால், அவன் அங்கு வந்து செல்லும் சில சிறு நரிகளை குறித்து அஜாக்கிரதையுள்ளவனாக இருந்தான். செடிகள் வளர்ந்து உயர்ந்துவிட்டன எனவே இந்த சிறிய நரிகள் என்ன செய்யமுடியும் என தன் உள்ளத்திலே சொல்லிக் கொண்டான். அவை உருவத்தில் மிகவும் சிறியவைகள், ஆனால் அவைகளோ அந்த தோட்டத்திலுள்ள திராட்சை செடிகளின் அடித் தண்டுகளை கடித்து காயப்படுத்திவிட்டு சென்றன. அதன் விளைவுகள் உடனடியாக தெரிய வில்லை, பிஞ்சுகள் உதிர்ந்து விழ ஆரம்பித்தன, இலைகள் காய்ந்து, படிப்படியாக செடிகள் உலர்ந்து போய்விட்டது. பிரியமானவர்களே, எங்கள் பிரயாசத்தின் பலனை முழுமையாக காண முடியாதிருக்கின்றபடி எங்கள் வாழ்க்கையிலிருக்கும் சிறிய காரியங்களை என்ன என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதினிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும் என்று வேதத்திலே வாசிக்கின்றோம். எனவே, உங்கள் பிரயாசத்தின் பலனை கெடுத்துப்போடக்கூடிய காரியங்கள் யாவையையும் உங்களை விட்டு அகற்றிவிடத் தீர்மானம் எடுங்கள்.

**உன்னதப்பாட்டு 2:15**

திராட்சத்தோட்டங்களைக் கெடுக்கிற குழிநரிகளையும் சிறுநரிகளையும் நமக்குப் பிடியுங்கள் நம்முடைய திராட்சத் தோட்டங்கள் பூவும் பிஞ்சுமாயிருக்கிறதே.

**ஜெபம்**: வழிநடத்தும் நல்ல தேவனே, என் பிராயசத்தின் பலனை கெடுக்கும் காரியங்கள் யாவையையும் என்னைவிட்டு அகற்றிவிடும்படி யாக எனக்கு பெலன் தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

ஞாயிறு | ஆவணி 11 | 🕮 மாலை வாசகம் – கலாத்தியர் 6:14

# ஆவிக்குரிய உறவு

எங்கள் ஆத்துமா இரட்சிப்பு இந்த உலகம் தரும் பதவி அந்தஸ்துகளாலும், எங்கள் கிரியைகளாலும் உண்டாகவில்லை. "கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல." எனவே மாம்சத்திற்குரிய பெருமை பாராட்டுதலால் உண்டாகும் பலன் அற்பமே. ஒரு சமயம், இயேசுவின் இனத்தார், இயேசு யார் என்பதையும் அவருடைய பூலோக பணியையும் அறியாததினால், தங்கள் அறிவின்படி அவர் மதிமயங்கியிருக்கிறார் என்று சொல்லி பிடித்துக்கொள்ளும்படி வந்தார்கள். (மாற்கு 3:21) அப்பொழுது அவருடைய சகோதரரும், தாயாரும் வந்து, வெளியே நின்று, அவரை அழைக்கும்படி அவரிடத்தில் ஆள் அனுப்பினார்கள். அவரைச் சுற்றிலும் உட்கார்ந்திருந்த ஜனங்கள் அவரை நோக்கி: இதோ, உம்முடைய தாயாரும் உம்முடைய சகோதரரும் வெளியே நின்று உம்மைத் தேடுகிறார்கள் என்றார்கள். அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: என் தாயார் யார்? என் சகோதரர் யார்? என்று சொல்லி, தம்மைச்சூழ உட்கார்ந்திருந்தவர்களைச் சுற்றிப் பார்த்து: இதோ, என் தாயும் என் சகோதரரும் இவர்களே! என்றார். தேவ சித்தம் நிறைவேறும்படிக்காய், இயேசு தாமே இந்த பூமியிலே, பிதாவாகிய தேவனுடைய சித்தப்படி ஒரு குடும்பத்தில் பிறந்தார். இது அந்த குடும்ப அங்கத்தவர்களுக்கு பெரிதான பாக்கியம். அந்த மேன்மைபாராட்டுதலினால் அந்தக் குடும்பத்தார் நித்திய வாழ்வை அடைய முடியாது. இயேசுவே இரட்சகர் என்று தங்கள் இருதயத்திலே விசுவாசித்து, தேவ சித்தத்தை தங்கள் வாழ்வில் செய்பவர்களே அவருடைய ராஜ்யத்தில் பங்காளிகளாக இருப்பார்கள். மாம்சத்தில் உண்டாகும் மேன்மைபராட்டுதலினால் தேவனை ஒருவரும் அறிய முடியாது. தேவ சித்தப்படி உண்டாகும் ஆவிக்குரிய உறவினாலேயே நாங்கள் இயேசுவோடு இணைந்து கொள்ள முடியும். எனவே இந்த உலகத்திற்குரிய மேன்மைகளை களைந்துவிட்டு தேவ சித்தத்தை எங்கள் வாழ்வில் நடப்பிப்போம்.

**மத்தேயு 12:50**

பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான் என்றார்.

**ஜெபம்**: கிருபை நிறைந்த தேவனே, அழிந்து போகும் இந்த உலகத்திற்குரிய காரியங்களினால் பெருமையடையாமல், ஆவிக்குரிய தேவ ஆசீர்வாதங்களை நாடித்தேட என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இயேசுவை நாடித் தேடுங்கள்

இயேசுவை எங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, அவருடைய ஐக்கியத்திலே இணைந்த நாளிலே, பாவத்திலிருந்து விடுதலை உண்டாயிற்று. மனதிலே பெரிதான மகிழ்ச்சி! பிசாசின் தந்திரங்களைக்குறித்த பயம் அகன்று போனது. தேவனை அறிகின்ற அறிவில் வளர வேண்டும், அவருடைய சித்தம் செய்ய வேண்டும் என்னும் வாஞ்சை இருந்தது. ஆனால், காலங்கள் கடந்து செல்லும் போது மனிதர்களுடைய வாழ்விலே இயேசுவை நாடித் தேடும் ஆர்வம் குறைந்து போய்விடுகின்றது. பின்பு, அவர்களை அறியாமல், அவர்களுடைய வாழ்க்கையிலே மேன்மைபாராட்டுதல் ஆரம்பித்துவிடுகின்றது. பின்பு அவரவர் வாழ்வில் நடப்பிக்கப்படும், நற்கிரியைகளினாலே (உதவி செய்தல், அன்னதானம் வழங் குதல் போன்றவைகள்) திருப்தி அடையும் நிலை உண்டாகிவிடுகின்றது. நற்கிரியைகள் நல்லது! தொடர்ந்து செய்யுங்கள். ஆனால் இயேசு கிறிஸ்துவை எப்போதும் நாடித் தேடுகின்றவர்களாக இருக்க வேண்டும். அதாவது, கிறிஸ்துவின் சாயல் அடையும்படிக்காய், எங்கள் உள்ளான மனிதனில் மாற்றம் ஏற்படத்தக்கதாய் ஒவ்வொரு நாளும் நாங்கள் அவரை அறிக்கின்ற அறிவில் வளரவேண்டும். சகேயு என்ற மனிதனைப் பாருங்கள், அவன் வரி வசூலிப்பவர்களின் தலைவனாக இருந்ததால் அவனுக்கு இந்த உலக செல்வம் இருந்தது. சமுதாயத்தினாலே பாவி என்று தள்ளப்பட்ட மனிதன். அவன் தோற்றத்தில் குள்ளனாக இருந்தான். இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப் பார்க்க வகைதேடினான். அவன் குள்ளனானபடியால், ஜனக்கூட்டத்தில் அவரைக் காணக்கூடாமல், அவர் போகும் வழியில் முன்னாக ஓடி, அவரைப் பார்க்கும்படி ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினான். இப்படியாக இயேசு எப்படிப்பட்டவர் என்று அறிய வாஞ்சையாக இருந்தான். இயேசு அவனுடைய வாழ்க்கையிலே வந்ததால், அவன் உள்ளத்திலே மாற்றங்கள் ஏற்பட்டது. இயேசு அவனுடைய வீட்டிற்கு சென்றது பெரிதான பாக்கியம். அவர் அவனுடைய வீட்டிற்கு சென்றதன் நோக்கம் என்ன? அந்த வீட்டை புனித ஸ்தலமாக்குவதற்கா? இல்லை! அவனுடைய வாழ்கை முறை மாறவேண்டும். மனதிலே தேவன் விரும்பும் மாற்றங்கள் உண்டாக வேண்டும். அந்த சகேயு இயேசுவை காண விரும்பியதைப் போல, நாங்களும் அவரை நாடித் தேட வேண்டும்.

**ரோமர் 12:2**

உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.

**ஜெபம்:** அன்பின் தேவனே, உம்மை நாடித் தேடும் வாஞ்சையில் நான் அனுதினமும் பெருகவும், என் மனம் புதிதாகும் படிக்காய் என் மனதிலே நீர் விரும்பும் மாற்றங்கள் உண்டாகும்படி என்னை நடத்தும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

செவ்வாய் | ஆவணி 13 | 📖 மாலை வாசகம் - 1 யோவா 2:1-11

# தேவனை அறிந்தவர்கள் யார்?

தாயின் கர்ப்பத்திலே எங்களை முன்குறித்து அழைத்த தேவனை நாங்கள் இன்னுமாய் அறிய வேண்டும் என்று பல முயற்சிகளை எடுக்கின்றோம். பரிசுத்த வேதாகமத்தை வாசித்து கற்றுக் கொள் ளுதல், வேதபாடங்களில் ஊக்கமாக கலந்து கொள்ளுதல், தேவ செய்திகளை கேட்டல், வேதம் சம்மந்தமான புத்தகங்களை வாசித்தல் போன்றவை அவற்றுள் சில. நீங்கள் இவைகளை செய்து வந்தால், தொடர்ந்தும் ஊக்கமாக இதை செய் யுங்கள். இவை யாவும் தேவனுடைய குணாதிசயங்களையும், அவரை நாடித் தேடி அவருடைய வார்த்தைக்கு கீழ்ப் படிந்த பரிசுத்தவான்களின் வாழ்வு எப்ப டியாக இருந்ததென்பதையும் எங்களு க்கு கற்று கொடுகின்றது. இவைகளை செய்து வருகின்ற நாங்கள், தேவனை அறிகின்ற அறிவில் வளர்ந்து வருகின்றோம் என்பதை எப்படி அறிந்து கொள்ளலாம்? அதாவது, மற்றவர்களின் நிலையை அல்ல, அவரவர் தன் தன் நிலையை அறிந்து கொள்ள வேண்டும். கிறிஸ்தவ வாழ்க்கையின் மையப் பொருள் தெய்வீக அன்பு. "பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன் பாயிருக்கக்கடவோம் ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது. **அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கி றான். (1 யோவான் 4:7).** தேவ அன்பு இல்லாதவன் தேவனை இன் னும் அறிய வேண்டிய பிரகாரமாய் அறியவில்லை. இந்த வசனங்களி னாலே சோர்ந்து போய்விடாதிருங்கள். எங்களுக்கு பெலன் தந்து உத வும்படிக்கு துணையாளராகிய தேவ ஆவியானவர் எங்களோடு இருக் கின்றார். தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை. நாம் ஒரு வரில் ஒருவர் அன்புகூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார் அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும். அப்பொழுது எங்களை காணுவோர் எங்கள் வழியாக தேவனை அறிந்து கொள்வார்கள். அவர் தம்முடைய ஆவியை நமக்குத் தந்தருளினதினாலே நாம் அவரிலும் அவர் நம்மிலும் நிலைத்திருக்கிறதை அறிந்திருக்கிறோம். தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்தி ருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார் அன்பில் நிலைத்திரு க்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலை த்திருக்கிறார். நாளுக்கு நாள் அவரை அறியும் இந்த அறிவில் வளர தேவன் கிருபை செய்வார்.

**1 யோவான் 4:8**

அன்பில்லாதவன் தேவனை அறியான், தேவன் அன்பாகவே இருக்கிறார்.

**ஜெபம்:** அன்பின் பரலோக தந்தையே, பரலோகிலே நிலையாக நிலை த்திருக்கும் உம்முடைய நிறைவான தெய்வீக அன்பில் நான் நாளுக்கு நாள் வளர்ந்து பெருகும்படிக்கு என்னை வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கிறிஸ்துவானவர் காட்டிய வழி

நடைமுறை வாழ்க்கையிலே தெய்வீக அன்பை எப்படி நாங்கள் காண் பிக்க முடியும்? முதல்படியாக நான் தெய்வீக அன்பில் வளரவே ண்டும் என்கின்ற சிந்தை உடையவனா(ளா)க மாற வேண்டும். நாளா ந்தம் எங்களைச் சூழ (வீட்டில், வேலையில், கல்வி நிலையங்களில், வெளியில், சபையில்) அநேக சம்பவங்கள் நடைபெற்று வருகின்றது. அவற்றுள் பலவற்றில் நாங்கள் நேரடி யாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்புள்ளவர்களாக்கப்படுகின்றோம். சில உதாரணங்கள், "சபை ஐக்கிய த்திலே, நீங்கள் சம்மந்தப்படாத ஒரு குற்றத்தை ஒருவர் உங்கள் மேல் சுமத்திவிட்டார் அல்லது சபையிலே உங்களுக்கு பிரியமில்லாத காரியம் ஒன்று நடைபெறப் போகின்றது அல் லது நடை பெற்று விட்டது" இப்படிப் பட்ட சூழ்நிலைகளை மனித பெலத் தினால் எதிர்நோக்குவது மிகவும் கடினமானது. அதனால், மனிதர்கள் உடனடியாக தங்கள் அறிவின்படி வாக்குவாதங்களையும், குழப்பங்களையும் ஏற்படுத்திக் கொள்கி ன்றார்கள். இதனால் வன்மம், பகை, கசப்பு இருதயத்தில் குடி கொண் டுவிடுகின்றது. ஆனால், தேவ அன்பில் வளர வாஞ்சையுள்ளவர்கள், இந்த வேளைகளிலே மனதிலே தேவ ஆவியானவரின் உதவியை கேட்க வேண்டும். என் மாசம் இப்படி செய்யச் சொல்கின்றதே, ஆனால் தேவன் என்ன சொல்லுகின்றார் என்று சிந்திக்க வேண்டும். நீங்கள் குற்றஞ்செய்து அடிக்கப்படும்போது பொறுமையோடே சகித் தால், அதினால் என்ன கீர்த்தியுண்டு? நீங்கள் நன்மைசெய்து பாடுப டும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்கு முன் பாகப் பிரீதியாயிருக்கும். இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீ ர்கள். கிறிஸ்துவும் தம் அன்பை காட்டும்படி எங்கள் பாடுகளை அவர் ஏற்றுக் கொண்டார். உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள் உங்க ளைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள் உங்களைப் பகை க்கிறவர் களுக்கு நன்மை செய்யுங்கள் உங்களை நிந்திக்கிறவர்களு க்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள் என்று இயேசு கூறியிருக்கின்றார். இப்படியான சிந்தையைத் தரித்த வர்ளாக இயேசுவின் அடிச்சுவடுகளை பின்பற்றிச் செல்வோம்.

**1 பேதுரு 2:21**

ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்க ளுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்.

**ஜெபம்**: அன்பின் பரலோக தந்தையே, பரலோகிலே நிலையாக நிலை த்திருக்கும் உம்முடைய நிறைவான தெய்வீக அன்பில் நான் நாளுக்கு நாள் வளர்ந்து பெருகும்படிக்கு என்னை வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அமரிக்கையான வாழ்வு

தெருக்களை கடந்து செல்லும் போது, மாளிகைகளாக காட்சியளிக்கும் வீடுகளின் வெளித் தோற்றத்தைக் கண்டு அதை இரசிப்பவர்கள் பலர். ஆனால் வீட்டிற்குள்ளே என்ன நடக்கின்றது என, தெருவிலே செல்லும் பாதசாரிகளுக்கு தெரியாது. வீடுகளின் தோற்றங்களினாலே அமரிக்கையான வாழ்வு உண்டாவதில்லை. அமரிக்கையான வாழ்வு தேவனால் உண்டாகும் ஈவு. குடிசைகளில் சமாதானமாக வாழ்பவர்களும் உண்டு அதே போல இடாம்பீகரமான மாளிகையில் வாழும் ஏழைகளும் உண்டு. அதாவது பரலோகத்திலிருந்து வரும் பொக்கிஷத்தினால் தன் இருதயத்தை நிறைத்துக் கொள்பவனே அழியாத செல்வந்தனாக இருக்கின்றான். தேவ சமாதானம் எங்களை சுற்றியிருக்கும் காரணிகளால் நிர்ணயிக்கப்படுவதில்லை. மாறாக எங்களுள்ளே இருக்கும் தேவ ஆவியானவரினாலே அனுக்கிரகம் செய்யப்படுகின்றது. இந்த இரகசியத்தை நன்கு அறிந்திருந்த தாவீது ராஜா, சமாதானத்தின் ஊற்றாகிய தேவனை எப்போதும் பற்றிக் கொண்டிருந்தார். கர்த்தர் என் மேய்ப்பராக இருப்பதினாலே நான் தாழ்ச்சியடைந்து போவதில்லை. அதாவது அவருக்குண்டான பதவி அந்தஸ்து செல்வம் இவைகளினாலே அல்ல, “**நிறைவான கர்த்தர் என்னோடிருப்பதால்**” எனக்கு குறைவு ஏற்படுவதில்லை என்று உறுதியாக அறிக்கை செய்தார். அவர் தொடர்ந்து கூறுகையில், கர்த்தருடைய வழிநடத்துதலில் மனத்திருப்தியும் தேவ நீதியும் உண்டு. எந்த பொல்லாத சூழ்நிலைகளும், அமரிக்கையான வாழ்க்கையை கெடுக்க முடியாது. எதிரிகளின் முன்னிலையில் வெற்றி உண்டு. ஆத்துமாவை தேற்றி, ஆவியினாலே அபிஷேகிக்கின்றார். அவருடைய நன்மையும் கிருபையும் உண்டு. ஈற்றிலே அவருடைய பரலோக வீட்டிலே நித்திய நித்தியமான அமரிக்கையான வாழ்வு உண்டு. பிரியமானவர்களே, இன்று நீங்கள் தேசத்திலே ஒரு பிரபல்யமான பிரஜையாக இருந்தாலும், ஒருவரும் அறியாத உலகத்தால் தாழ்த்தப்பட்ட பிரஜையாக இருந்தாலும், பெரும் உலக செல்வம் நிறைந்தவனாக இருந்தாலும், உலக அளவு கோலின்படி வறியவர்களாக இருந்தாலும், நித்திய நிறைவான வாழ்வை கொடுக்கும் கர்த்தரை பற்றிக் கொள்ளுங்கள். உலகம் காட்டும் வெளித்தோற்றங்களினால் மயங்கிப்போகாமல், அமரிக்கையான வாழ்வை அருளும் கர்த்தரையே நம்பி வாழுங்கள்.

**சங்கீதம் 23:1**

**கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார் நான் தாழ்ச்சியடையேன்.**

**ஜெபம்**: பரலோக தேவனே, நிலையற்ற சிற்றின்பத்தை தரும் இந்த உலகத்தின் மாயைக்குள் சிக்கி சமாதானத்தை இழந்து போகாமல் உம்மையே நம்பி வாழ என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இருதயத்தின் அந்தரங்கங்கள்

ஒரு காரியாலயத்திலே வேலை பார்த்து வந்த மேற்பார்வையாளர், தன்னுடைய வேலை சரிவர செய்து முடிக்க தடையாக இருக்கும் காரணிகள் என்ன என்பதையும், அதை எப்படி மாற்றியமைக்க முடியும் என்பதையும் பணிவாக தன் முகாமையாளரிடம் எடுத்துக் கூறினார். அந்த மேற்பார்வையாளர் கூறியவற்றை நல் மனதுடன் ஏற்றுக் கொள்வதுபோல அந்த முகாமையாளர் காணப்பட்டார். ஆனால் மனதின் ஆழத்தில் "இவைகளை எனக்கு சொல்வதற்கு இவர் யார்?" என்ற எரிச்சல் ஏற்பட்டது. அதனால், அந்த மேற்பார்வையாளரை வேலை நீக்கம் செய்வதற்கு சந்தர்ப்பத்தை மிகவும் கவனமாக எதிர்பார்த்திருந்தார். மனிதர்கள் தங்கள் உள்ளத்தில் ஒன்றை வைத்துக்கொண்டு, வெளியிலே வேறொன்றை காண்பிக்கக்கூடிய ஆற்றல் உடையவர்கள். தங்கள் உள்ளத்திலிருக்கும் அநியாயங்களை வெளிக்காட்டாமல், தங்கள் எண்ணத்தை நிறைவேற்றும் படி மறைவாகவும் சமார்த்தியமாகவும் தந்திரங்களை செய்யும் மனிதர்களின் அந்த சுபாவத்தை, இந்த உலகிலே செயற்திறன் என்று அழைக்கப்படலாம். இப்படிப்பட்ட நிகழ்வுகள் பல மட்டங்களில், ஏறத்தாழ எல்லா உலக அமைப்புக்களிலும் காணக்கூடியதாக இருக்கும். ஆனால் இருதயத்தை ஆராய்ந்தறிக்கின்ற தேவன் மனிதனின் உள்ளத்தில் என்ன இருக்கின்றதென்பதை ஆராய்ந்து அறிகின்றார். காயீனும் ஆபேலும் தேவனுக்கு பலி செலுத்தினார்கள். ஆபேலின் பலி தேவனுக்கு ஏற்புடையதாக இருந்தது என்று அவன் சகோதரனாகிய காயீன் அறிந்த போது அவனுக்கு எரிச்சல் உண்டாயிற்று. அவனுடைய மனநிலை மாற்றமடைந்ததை அவன் சகோதரனாகிய ஆபேல் அறியாதிருந்திருக்கலாம். ஆனால் இருதயத்தை ஆராய்ந்தறிகின்ற தேவன் அவன் உள்ளத்திலிருந்த எரிச்சலையும் அதனால் வரப்போகும் விளைவையும் அறிந்திருந்தபடியால் அதை அவனுக்கு வெளிப்படுத்தினார். ஆனால் அவனோ தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் தன் சகோதரனை கொன்று போட்டான். இந்த உலகிலே மனிதர்கள், வெளி தோற்றத்தை அல்லது உலக அந்தஸ்த்தை பார்த்து பலவிதமாக உங்களை தரப்படுத்தலாம் ஆனால் இருதயங்களை ஆராய்ந்தறிகின்றவர் நாங்கள் யார் என்பதை அறிந்திருக்கின்றார். ஆகவே எங்கள் உள்ளத்தின் நினைவுகள் தேவனுக்கு ஏற்புடையதாக இருப்பதாக.

**சங்கீதம் 44:21**

**இருதயத்தின் அந்தரங்கங்களை அவர் அறிந்திருக்கிறாரே.**

**ஜெபம்:** நீதியின் தேவனே, என் இருதயத்தின் எண்ணங்கள் எல்லாம் உம்முடைய சமுகத்திலே ஏற்புடையதாக இருக்கும்படிக்கு, உண்மையுள்ள வாழ்க்கை வாழும்படிக்கு எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பெரியவர் எங்களோடு

யாவும் சிறப்பாக சென்றுகொண்டிருந்த குடும்பம் ஒன்றில், திடீரென பல சவால்களை எதிர்நோக்க வேண்டிய நிலை உண்டாயிற்று. குறைவுகள் ஏற்படத் தொடங்கியதால் ஆங்காங்கே முறுமுறுப்பு ஆரம் பமாகிவிட்டது. ஒரு நாள் தந்தையார் குடும்பதிலுள்ள யாவரையும் அழைத்து அவர்களோடு பேசினார். இது எங்கள் குடும்பம். குடு ம்பத்திலுள்ள குறைகளை யாவரும் அறிந்திருக்கின்றீர்கள். எங்கள் குடு ம்பம் மறுபடியும் மறுமலர்ச்சி அடைய வேண்டும் என்ற எண்ணம் எங்கள் யாவரிடமும் உண்டு. அதற்காக நாங் கள் யாவரும் கர்த்தரை நோக்கி விண் ணப்பிக்கின்றோம். ஆனால், “குறைவு களை நிறைவாக்கும்படி நான் என்ன செய்யப் போகின்றேன்”? என்று நாங் கள் ஒவ்வொருவரும் எங்களை கேட் டுக் கொள்ள வேண்டும். நாங்கள் மறு படியும் நல்ல நிலைக்கு திரும்ப வேண் டும் என்ற பொதுவான நோக்கத்தின் கீழ் எங்கள் பங்களிப்பைக் கொடுக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டார். பிரியமானவர்களே, இன்று வீட்டிலும், சபை ஐக்கியத்திலும் நிறைவு ஏற்படும்படி நாங்கள் எண்ணமுள்ளவர்களாக இருக்கின்றோம். அந்த எண்ணம் நல்லது. இருக்கும் குறைவுகளை நாங்கள் அறிந்திருக்கின்றோம். அவை நிறைவாகும்படி தேவனை வேண்டிக் கொள்கின்றோம். அந்த நிறைவு உண்டாகும்படிக்கு என்னுடைய பங்களிப்பு என்ன? எங்களுடைய பெலன் குறுகியதாக இருக்கலாம் ஆனால் எங்களுக்கு இருக்கும் பெலத்தோடு, தேவனை நம்பி நாங்கள் நற்கிரியைகளை செய்யும் போது தேவ ஆவியானவர் தாமே பெரிதான விளைச்சலை உண்டு பண்ணுவார். மீதியானியரின் கொடுமையிலிருந்து இஸ்ரவேலை விடு விக்கும்படி கிதியோன் என்னும் மனிதனை கர்த்தர் அழைத்தபோது, நான் இஸ்ரவேலை எதினாலே ரட்சிப்பேன் இதோ, மனாசேயில் என் குடும்பம் மிகவும் எளியது. என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறியவன் என்றான். அதற்குக் கர்த்தர்: நான் உன்னோடேகூட இருப் பேன் ஒரே மனுஷனை முறிய அடிப்பதுபோல நீ மீதியானியரை முறிய அடிப்பாய் என்றார். எனவே, பெரியவர் எங்ளோடு இருக்கும் போது, கலங்காமல் முன்னேறிச் செல்லுவோம்.

**1 யோவான் 4:4**

**பிள்ளைகளே, நீங்கள் தேவனாலுண்டாயிருந்து, அவர்களை ஜெயித்தீர்கள் ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்.**

**ஜெபம்**: சர்வ வல்லமையுள்ளவரே, குறைவுகளைக் கண்டு சோர்ந்து போகாதபடிக்கு, எனக்கு இருக்கும் பெலத்தின்படி நிறைவை நோக்கி முன்னேற என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஏக்கமும் தவிப்பும்

என்னுடைய நிலையை யார் அறிவார்? அதை விளக்கிக் கூறுவது எப்படி எனத் தெரியவில்லை? என்ற நிலைக்கு பலர் தள்ளப்படுவதுண்டு. தாவீது ராஜாவும் தன் இக்கட்டின் நாளிலே தேவனை நோக்கி இவ்வண்ணமாக பாடினார். "நான் வேதனைப்பட்டு ஒடுங்கினேன் நாள் முழுதும் துக்கப்பட்டுத் திரிகிறேன். என் குடல்கள் எரிபந்தமாய் எரிகிறது. என் மாம்சத்தில் ஆரோக்கியம் இல்லை. நான் பெலனற்றுப்போய், மிகவும் நொறுக்கப்பட்டேன் என் இருதயத்தின் கொந்தளிப்பினால் கதறுகிறேன். ஆண்டவரே, என் ஏக்கமெல்லாம் உமக்கு முன்பாக இருக்கிறது. என் தவிப்பு உமக்கு மறைவாயிருக்கவில்லை. என் உள்ளம் குழம்பி அலைகிறது. என் பெலன் என்னை விட்டு விலகி, என் கண்களின் ஒளி முதலாய் இல்லாமற்போயிற்று. என் சிநேகிதரும் என் தோழரும் என் வாதையைக் கண்டு விலகுகிறார்கள் என் இனத்தாரும் தூரத்திலே நிற்கிறார்கள். என் பிராணனை வாங்கத்தேடுகிறவர்கள் எனக்குக் கண்ணிகளை வைக்கிறார்கள் எனக்குப் பொல்லாங்கு தேடுகிறவர்கள் கேடானவைகளைப்பேசி, நாள்முழுதும் வஞ்சனைகளை யோசிக்கிறார்கள்." சில வேளைகளிலே எங்களுடைய சூழ்நிலையை நாங்கள் கூட முற்றும் முழுமையாக அறிய முடியாதபடி காரிருள் எங்கள் வாழ்வை மூடிக் கொள்கின்றது. சிலர் பாவம் செய்ததினால் படுகுழயில் தள்ளப்பட்டது போன்ற வேதனையில் தவிக்கின்றார்கள். இன்னும் சிலர் எனக்கு ஏன் இப்படி நடந்தது என்று அறியாதிருக்கின்றார்கள். நாளை என்ன நடக்கும் என்று தெரியாமல் இதயம் கலங்குகின்ற நேரம் உண்டு. உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக என்று கூறிய இயேசு இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவர். உங்கள் நிலையை நன்றாய் அறிந்திருக்கின்றார். உங்கள் உள்ளத்தின் ஏக்கம் தவிப்பு எல்லாவற்றையும் அவரிடம் தெரியப் படுத்துங்கள். உங்கள் வாழ்வை முற்றுமுழுவதுமாக அவரிடம் ஒப்புக் கொடுங்கள். உங்கள் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிருங்கள். அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார். உங்கள் நீதியை வெளிச்சத்தைப்போலவும், உங்கள் நியாயத்தைப் பட்டப்பகலைப்போலவும் விளங்கப்பண்ணுவார்.

**சங்கீதம் 38:9**

ஆண்டவரே, என் ஏக்கமெல்லாம் உமக்கு முன்பாக இருக்கிறது. என் தவிப்பு உமக்கு மறைவாயிருக்கவில்லை.

**ஜெபம்:** இரக்கமுள்ள தேவனே, என்னுடைய இக்கட்டு நாளில் அடைக்கலமானவரே, என்னுடைய ஏக்கம் தவிப்பு எல்லாம் அறிந்தவரே. உம்மை நம்பியிருக்கின்றேன், எனக்கு சகாயம் செய்ய தீவிரியும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

திங்கள் | ஆவணி 19 | 📖 மாலை வாசகம் - 1 தீமோ 6:6-10

# குறையாத பொக்கிஷம்

இந்த உலக ஐசுவரியத்தின் ஆசையால் நிறைந்தவர்கள் தங்கள் நிலையையும் தங்கள் சந்ததியினரின் நிலையையும் குறித்து அதிக நிச்சயமுடையவர்களாக இருக்கின்றார்கள். உலக செல்வத்தின் பற்று அவர்களின் மனக்கண்களை குருடாக்கிவிடுவதால், படைத்த தேவனையும், இனி வரவிருக்கும் நித்திய வாழ்வையும் குறித்து உணர்வற்றவர்களாக வாழ்கின்றார்கள். பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல என்று இயேசு கூறியிருக்கின்றார். அல்லாமலும், ஒரு உவமையை சொன்னார்: ஐசுவரியமுள்ள ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது. அப்பொழுது அவன்: நான் என்ன செய்வேன்? என் தானியங்களைச் சேர்த்து வைக்கிறதற்கு இடமில்லையே. நான் ஒன்று செய்வேன், என் களஞ்சியங்களை இடித்து, பெரிதாகக் கட்டி, எனக்கு விளைந்த தானியத்தையும் என் பொருள்களையும் அங்கே சேர்த்து வைத்து, பின்பு: ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்துவைக்கப்பட்டிருக்கிறது. நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக் கொண்டான். தேவனோ அவனை நோக்கி: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார். இந்த உலகத்திலே மனிதன் உயிர்வாழ்வதற்கு எங்களுக்கு என்ன தேவை என்பதை பரமபிதா அறிந்திருக்கின்றார். ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று, நாங்கள் கவலையடையத் தேவையில்லை. உண்ண, உறங்க, உடுக்க வசதியற்று வாடும் ஏழைகள் இருக்கும் போது, செல்வங்களை மிகையாக சேர்த்து வைப்பது சரியாகுமா? இயேசு சொன்னார்: உங்களுக்கு உள்ளவைகளை விற்றுப் பிச்சைகொடுங்கள், பழமையாய்ப் போகாத பணப்பைகளையும் குறையாத பொக்கிஷத்தையும் பரலோகத்திலே உங்களுக்குச் சம்பாதித்து வையுங்கள், அங்கே திருடன் அணுகுகிறதுமில்லை, பூச்சி கெடுக்கிறதுமில்லை.

**லூக்கா 12:21**

தேவனிடத்தில் ஐசுவரியவானாயிராமல், தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கிறவன் இப்படியே இருக்கிறான் என்றார்.

**ஜெபம்:** பரலோக தேவனே, இந்தப் பூமிக்குரிய செல்வங்களை நாடித் தேடாமல், அழியாததும் மாசற்றதுமான பரலோக பொக்கிஷத்தை சேர்த்து வைக்க எனக்கு உதவிபுரிவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

செவ்வாய் | ஆவணி 20 | 📖 மாலை வாசகம் – மத்தேயு 28:19–20

# இயேசுவின் சீஷர்கள் யார்?

இயேசு கிறிஸ்து தாமே, பூலோக திருப்பணியை நிறைவேற்றிய பின், பரலோகத்திற்கு எழுந்தருளும் முன்பாக, தமது சீஷர்களை நோக்கி: “ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்” என்று கூறினார். எப்படி கர்த்தராகிய இயேசுவின் சீஷராக வாழ்வது? இயேசு சொன்னார்: நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான் என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது. ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான் அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள் அவைகள் எரிந்துபோம். நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள். ஆம் பிரியமானவர்களே, எப்படியாக ஒரு மரத்தின் கிளை (திராட்சைக் கொடி) அந்த மரத்தோடு (திராட்சை செடி) இணைந்திருக்கின்றதோ, அந்தப்படி நாங்களும், இயேசு கிறிஸ்துவோடு இணைந்திருக்க வேண்டும். ஒரு கிளையானது எப்போது அந்த மரத்திலிருந்து துண்டிக்கப்பட்டு போகின்றதோ, அன்றோடு அந்த கிளையானது இனி அந்த மரத்திற்குரியதல்ல. அதுபோலவே, கிறிஸ்தவ வாழ்க்கையின் அடிப்படையான அம்சமானது நாங்கள் கிறிஸ்துவோடு இணைந்திருக்க வேண்டும். அவருடைய கற்பனைகளை நிறைவேற்றும் போது நாங்கள் அவரோடு இணைந்திருக்கின்றோம். அவரோடு இணைந்திருக்கும் போது நாங்கள் இயேசுவின் சீஷர்களாக இருப்போம்.

**யோவான் 15:4**

**கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாததுபோல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள்.**

**ஜெபம்:** அன்பின் பரலோக தந்தையே, இயேசுவோடு இணைந்திருக்கும் வாழ்வு வாழும்படியாய், உம்முடைய கற்பனைகளை மனதார கைகொள்ளும்படிக்கு என் மனக்கண்களை திறந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மகிமையின் ராஜ்யத்தை நோக்கி

கர்த்தராகிய இயேசு இந்த உலகத்திலே வாழ்ந்த நாட்களிலே, ரோம ராஜ்யம் மிகவும் வல்லமைமிக்க ராஜ்யமாக இருந்தது. அந்நாட்களிலே ரோம குடியுரிமை உடையவர்கள் அதைக் குறித்து மேன்மைபாராட்டுவார்கள். அதே போல இந்த நாட்களிலும், மேற்கத்தைய நாடுகளின் குடியுரிமையை பெறுவதை பலர் மேன்மையாக எண்ணுகின்றார்கள். இவை யாவும் எட்டாப்பழம் என்று ஏக்கத்துடன் வாழ்பவர்கள் பலர். ஆனால் இந்த ராஜ்யங்கள் யாவும் ஒரு நாள் அழிந்து போய்விடும். அந்நாளிலே அதன் வல்லமையும் மகிமையும் ஒழிந்து போகும். அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய பொன் நாடாகிய பரலோகத்தின் குடியுரிமையை பெறும்படியாய் நாங்கள் அழைக்கப்பட்டிருக்கின்றோம். இப்போது விசுவாசக் கண்களால் காணும் அந்த ராஜ்யத்தை ஒரு நாள் முகமுகமாய் தரிசிப்போம். ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்துபோகிறதில்லை. எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது. மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது. ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள். அந்த நித்திய ராஜ்யத்திலே ஒரு சாபமுமிராது. தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும். அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவித்து, அவருடைய சமுகத்தைத் தரிசிப்பார்கள் அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும். அங்கே இராக்காலமிராது. விளக்கும் சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை. தேவனாகிய கர்த்தரே அவர்கள்மேல் பிரகாசிப்பார். அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள். இந்த உலக பாடுகளைக் கண்டு சோர்ந்து போகாதிருங்கள். விசுவாசத்திலே நிலைத்திருங்கள். ஜீவ ஓட்டத்தை வெற்றியோடு ஓடி முடிக்கத்தக்கதாக தேவன் பெலன் தந்து நடத்துவார்.

**பிலிப்பியர் 3:20**

நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

**ஜெபம்:** பரலோகத்திலிருக்கின்ற எங்கள் பிதாவே, நிலையில்லாத இந்த உலத்திலுள்ளவைகளை நாடித்தேடாமல், நிலையான உம்முடைய ராஜ்யத்தை நோக்கி ஓட எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஏழைகளை நினைவு கூருங்கள்

"இந்த ஏழை என்னையும் நினைந்தருளும்" என்று நாங்கள் தேவனை நோக்கி ஜெபிப்பதுண்டு. தாவீது ராஜாவும் "இந்த ஏழை கூப்பிட்டான், கர்த்தர் கேட்டு, அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார்" என்று கூறினார். நாங்கள் சற்று தரித்திருந்து சிந்தனை செய்து பார்ப்போமென்றால், எங்களை சூழ வாழும் ஏழைகள் பலர் எங்களை நோக்கி கூப்பிடுவதின் சத்தத்தைக் கேட்கலாம். சில வேளைகளிலே நாங்கள் எங்கள் நிலையைக்குறித்து அதிகமாக அலட்டிக் கொள்வதால், தேவன் எங்களுக்கு அருளின ஆசீர்வாதங்களை உணர்ந்து கொள்ளாமல் இருக்கின்றோம். எப்போதும் தேவனிடம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற மனநிலையே நம்மிடம் இருப்பதால், எங்கள் நிலையைவிட அவலநிலையில் இருக்கும் வறியவர்களின் கூக்குரலை கேட்க முடியாதபடிக்கு எங்கள் செவிகள் மந்தமாக போய்விடுகின்றது. எப்போதும் நாங்கள் இந்த உலக அளவுகோலின்படி முன்னேற்றம் அடைய வேண்டும் என்றிருப்பதால், தேவன் எங்கள் ஆத்துமாவிற்கு செய்த எண்ணற்ற நன்மைகளை கூடிய சீக்கிரத்தில் மறந்து போய் விடுகின்றோம். வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்ற வார்த்தைக்கமைய எங்களால் முடிந்த அளவிற்கு திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்க வேண்டும். அப்போஸ்தலராகிய பவுல் உரைத்தபடி, மற்றவர்களுக்குச் சகாயமும் உங்களுக்கு வருத்தமும் உண்டாகும்படி யல்ல, சமநிலையிருக்கும்படியாகவே சொல்லுகிறேன். எப்படியெனில், மிகுதியாய்ச் சேர்த்தவனுக்கு அதிகமானதுமில்லை, கொஞ்சமாய்ச் சேர்த்தவனுக்குக் குறைவானதுமில்லை என்று எழுதியிருக்கிற பிரகாரம், சமநிலைப் பிரமாணத்தின்படியே, அவர்களுடைய செல்வம் உங்கள் வறுமைக்கு உதவும்படிக்கு இக்காலத்திலே உங்களுடைய செல்வம் அவர்களுடைய வறுமைக்கு உதவ வேண்டும். சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான் தீங்குநாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார். கர்த்தர் அவனைப் பாதுகாத்து அவனை உயிரோடே வைப்பார். பூமியில் அவன் பாக்கியவா னாயிருப்பான் அவன் சத்துருக்களின் இஷ்டத்திற்கு நீர் அவனை ஒப்புக்கொடீர். படுக்கையின்மேல் வியாதியாய்க்கிடக்கிற அவனைக் கர்த்தர் தாங்குவார்.

**சங்கீதம் 41:1**

**சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான் தீங்குநாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார்**

**ஜெபம்**: இரக்கமுள்ள தேவனே, எப்போதும் என்னைக் குறித்த சிந்தையோடு இருக்காமல், சிறுமைப்பட்டவர்களை நினைவு கூர்ந்து அவர்களை விசாரிக்கும்படி என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

**வெள்ளி | ஆவணி 23** 📖 மாலை வாசகம் – மத்தேயு 13:43

# மேன்மையான அழைப்பு

உலக பிரசித்தி பெற்ற விளையாட்டு அணி ஒன்றில், உங்களில் ஒருவர் அல்லது உங்கள் பிள்ளைகளில் ஒருவர் அங்கத்தவராக இருந்தால் எவ்வளவாக சந்தோஷமடைவீர்கள்? இந்த காலகட்டத்திலே கல்விமானாக இருப்பதைவிட மனிதர்கள் பிரபல்யமான விளையாட்டு வீரனாக இருக்க விரும்புகின்றார்கள். தங்களுக்கு தூரத்திலே அறிமுகமானவர் ஒருவர் உலகக் கிண்ண உதைபந்தாட்டப்போட்டியில் இருந்தால், அதை மனிதர்கள் மத்தியிலே எந்த சலனமுமின்றி மிகவும் பெருமிதமாக பேசிக் கொள்வார்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்திலே இருந்த நாட்களிலே, தம்முடைய திருப்பணிக்காக பன்னிருவரை தெரிவு செய்தார். அந்நாட்களிலே, மேன்மையான குடிமக்கள் இருந்தார்கள், பெரும் கல்விமான்கள் இருந்தார்கள், பராக்கிரமமுள்ள படைத் தளபதிகள் இருந்தார்கள், பெரும் அதிகாரிகள் இருந்தார்கள், விளையாட்டு வீரர்கள் இருந்தார்கள், மதங்களைச் சார்ந்த தலைவர்கள் இருந்தார்கள் ஆனாலும் தம்முடைய அழியாத ராஜ்யத்தின் திருப்பணியை நிறைவேற்றும்படி தமக்கென எளிமையானவர்களை தெரிந்து கொண்டார். எவ்வளவு ஆனந்த பாக்கியம் அது! முடிவில்லாத ராஜ்யத்தின் வேலைக்காக சர்வ வல்லமை படைத்த தேவனால் வேறுபிரிக்கப்பட்டார்கள். சற்று சிந்தித்துப் பாருங்கள். அநேகமாயிரம் மனிதர்கள் மத்தியிலே, இன்று எங்களையும் அந்த ராஜ்யத்தில் ஆசாரியர்களாகவும், ராஜாக்களாகவும் தமக்கென வேறுபிரித்திருக்கின்றார். ராஜரீகமாக பலிகளை செலுத்தும்படிக்கு. தம்முடைய சாயலை தரிக்கும்படிக்கு, இரட்சிப்பின் நற்சாட்சியாக இந்த உலகத்திலே திகழும்படிக்கு எங்களை வேறு பிரித்திருக்கின்றார். முடிவிலே தம்முடைய நித்திய ராஜ்யத்திலே நீடுழியாய் வாழும் பாக்கியத்தை தந்தருள்வார்.

**வெளி 1:6**

நம்மிடத்தில் அன்புகூர்ந்து தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக. ஆமென்.

**ஜெபம்**: பரலோக தேவனே, உம்முடைய நித்திய ராஜ்யத்தின் பணிக்காக உலகத்திலே நற்சாட்சியாக விளங்கும்படிக்கு நீர் என்னை அழைத்தீர், அந்த அழைப்பை உணர்ந்து வாழ கிருபை செய்யும் இரட்சகர் இயேசு வழியாக ஜெபி க்கிறேன் ஆமேன்.

# மருண்டுபோகாதிருங்கள்

வானாந்திர வழி இலகுவான பிரயாணம் அல்ல. காலநிலைகளினாலும், மிருகங்கள் மற்றும் ஊரும் பிராணிகளாலும், கள்வர்களாலும் வரும் மோசங்கள் அநேகம். இவ்வண்ணமாகவே இஸ்ரவேல் ஜனங்கள், எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து, வாக்களிக்கப்பட்ட செழிப்புள்ள கானான் தேசத்திற்கு வழிநடத்திச் செல்லப்பட்டார்கள். சில நாட்கிளிலே எல்லாமே அவர்களுக்கு எதிராக தோன்றிற்று, பலர் விரக்தியடைந்து தங்களை வழிநடத்திச் செல்ல ஏற்படுத்தப்பட்ட தலைவனை (மோசே) கல்லெறிந்து கொல்லும்படிக்கு முனைந்தார்கள். ஏனெனில் தேவனின் வாக்குத்தத்தத்தை குறித்த நம்பிக்கை அவர்கள் இருதயத்தில் இருக்காதபடியால், அவர்களை சூழ்ந்து நெருக்கும் பயங்கரங்களை கண்டு மருண்டு போனார்கள். இதற்கொத்ததாகவே, நாங்களும் வாக்களிக்கப்பட்ட பரம கானானாகிய பரலோகத்தை நோக்கி பயணம் செய்கின்றோம். இந்த பிரயாணத்தின் வழியில் (எங்கள் வாழ்க்கையில்) பல சவால்கள் உண்டு. சில வேளைகளிலே இந்த சவால்கள் நாங்கள் நம்பியிருந்த மனிதர்களாலே ஏற்படலாம். அவைகள் மேல் எங்கள் கண்களை வைத்து, எங்கள் இலக்கை மறந்து விட வேண்டும் என்பதே பிசாசானவனின் திட்டம். நீங்களோ அவைகளினாலே மருண்டுபோகாதிருங்கள். நாங்கள் ஏன் விசேஷித்தவர்களாயிருக்கின்றோம்? இந்த பிரயாணத்திலே அன்பின் தேவன் எங்களோடு இருப்பதினால் நாங்கள் பெரும் பாக்கியம் பெற்ற ஜனங்கள். நீங்கள் ஒரே ஆவியிலே உறுதியாய் நின்று, ஒரே ஆத்துமாவினாலே சுவிசேஷத்தின் விசுவாசத்திற்காகக் கூடப்போராடுங்கள். இந்த போராட்டத்தின் ஆயுதங்கள் இந்த உலகத்திற்குரிய வாதங்களும் கலகங்களும் அல்ல. எங்கள் போராயுதங்கள் ஆவியின் வல்லமை. எனவே மாம்சத்தில் போர் செய்கின்றவர்களாக இல்லாதபடிக்கு நாங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். சில வேளைகளிலே அவர் மௌனமாக இருக்கின்றார் என்று நாங்கள் எண்ணலாம், அந்த எண்ணம் எங்களுடைய பெலவீனம்.அவர் எங்களோடு இருப்பது எங்கள் பெலன்.

**பிலிப்பியர் 1:27**

**எதிர்க்கிறவர்களால் ஒன்றிலும் மருளாதிருக்கிறீர்களென்று உங்களைக்குறித்து நான் கேள்விப்படும்படி, எவ்விதத்திலும் நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக மாத்திரம் நடந்துகொள்ளுங்கள்.**

**ஜெபம்:** சர்வ வல்லமையுள்ள தேவனே, இந்த உலகத்தினால் உண்டாகும் பயங்கரங்களை கண்டு நான் மாம்சத்தில் போர் செய்யாதபடி உம்மை நோக்கி பார்க்க என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தாங்கி நடத்துங்கள்

பெலவீனர் என்று தேவன்தாமே எங்களை தள்ளிவிடாமல் தம்முடைய கிருபையினாலே எங்களை தாங்கி நடத்தி வருகின்றார். அவர் நம் முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார். பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரியதாயிருக் கிறது. மேற்குக்கும் கிழக்குக்கும் எவ் வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார். தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார் எங்கள் பெலத்திற்கு மேலாக நாங்கள் சோதிக் கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக் கொள்ளும்படியான போக்கையும் உண் டாக்கி வருகின்றார். சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடு த்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார். மேற்கூறியவைகள் யாவையும் நாங்கள் யாவரும் தேவனிடம் அனு தினம் பெற்றுக் கொள்கின்றோம். எனவே மற்றவர்களுடைய பெலவீன நேரங்களிலே தேவன் எங்கள் மேல் காட்டிய இரக்கத்தை மற்றவர்க ளுக்கு காண்பிக்க வேண்டும். பாவம் செய்து ஒடுங்கிப் போயிருக் கின்றவர்களை இன்னும் பாவம் செய்யும்படியாக அவர்கள் பெலனற் றுக் போகும்படியாய் நாங்கள நடந்து கொள்ளக்கூடாது. ஒருவன் ஒரு காரியத்தில் பெலவீனமாக இருக்கின்றான் என்று அறிந்தால் அந்த பெலவீனத்தினால் அவன் இன்னும் அதிக பாவம் செய்யும்படியாய் நாங்கள் அவர்களை பாவ சோதனைக்குள் தள்ளிவிடக்கூடாது. ஒரு மனிதன் கவலையீனமாக விபத்தொன்றில் அகப்பட்டு காயப்பட்டிரு க்கும் போது, அவன் புண்களுக்கு வைத்தியம் செய்யாமல், இன்னும் அதிகதிமாக அந்த புண்களின் நோவு பெருகும்படி அதில் அடிப்பது சரியாகுமா? இல்லை. பிரியமானவர்களே, பலவீனரைத் இன்னுமாய் தாக்காமல் உங்களால் முடிந்த அளவு தாங்குங்கள். அவர்கள் விடுத லைக்காக ஊக்கத்தோடு ஜெபம் செய்யுங்கள்.

**1 தெச 5:14**

ஒழுங்கில்லாதவர்களுக் குப் புத்திசொல்லுங்கள், திடனற்றவர்களைத் தேற் றுங்கள், பலவீன ரைத் தாங்குங்கள், எல்லாரிடத் திலும் நீடிய சாந்தமாயி ருங்கள்.

**ஜெபம்:** இரக்கமுள்ள தேவனே, என்னுடைய பலவீன நேரங்களிலே என்னை நீர் தாங்கி நடத்துவது போல, நானும் மற்றவர்களின் பலவீன நேரங்களில் அவர்களுக்கு உதவி செய்யும் உள்ளத்தைத் தாரும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கர்த்தர் எங்ளோடு இருக்கின்றார்

ஒரு நாள் சாயங்காலத்தில், கர்த்தாகிய இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: அக்கரைக்குப் போவோம் வாருங்கள் என்றார். அவர்கள் தங்களோடு இருந்த ஜனங்களை அனுப்பிவிட்டு அக்கரைக்கு போகும்படியாய் புறப்பட்டார்கள். அப்பொழுது, பலத்த சுழல்காற்று உண்டாகி, படவு நிரம்பத்தக்கதாக, அலைகள் அதின்மேல் மோதிற்று. கப்பலின் பின்னணியத்தில் அவர் தலையணையை வைத்து நித்திரையாயிருந்தார். அவர்கள் அவரை எழுப்பி: போதகரே, நாங்கள் மடிந்துபோகிறது உமக்குக் கவலையில்லையா என்றார்கள். அவர் எழுந்து, காற்றை அதட்டி, கடலைப் பார்த்து: இரையாதே, அமைதலாயிரு என்றார். அப்பொழுது காற்று நின்று போய், மிகுந்த அமைதலுண்டாயிற்று. அவர் அவர்களை நோக்கி: ஏன் இப்படிப் பயப்பட்டீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற்போயிற்று என்றார். பிரியமானவர்களே, சற்று சிந்தித்துப் பாருங்கள்! படைப்புக்கள் படைத்தவரை மேற்கொள்ளக் கூடுமோ! அழிவுக்குரியவைகள் நித்தியமானவரை மேற்கொள்ள முடியாது. சர்வ வல்லவர் அக்கரைக்குப் போவோம் என்று சொல்லி இருக்க யாரால் அதை தடுத்து நிறுத்த முடியும்? ஒருவராலும் கூடாது. கர்த்தரை அறிந்து அவர் வழியாக நன்மைகளை பெற்றுக் கொண்டிருக்கும் எங்களுடைய வாழ்க்கையிலும் நெருக்கங்கள் சூழ்ந்து கொள்ளும் போது, அழைத்தவர் உண்மையுள்ளவர் என்பதை மறந்து போய்விடுகின்றோம். நாங்கள் கர்த்தரையும் அவருடைய நன்மைகளையும் மறந்து போவதால், கர்த்தர் எங்கே? ஏன் மௌனமாக இருக்கின்றார்? அவர் என் பிரச்சனைகளை கண்டு கொள்ளுவதில்லையா என்று நாங்கள் முறுமுறுப்பதுண்டு. கர்த்தர் ஒருபோதும் எங்களை மறந்து போவதுமில்லை, கைவிடுவதுமில்லை. ஆனால் பயம் எங்களை ஆட்கொள்வதால், நாங்கள் அவர் எங்ளோடே இருக்கின்றார் என்ற வாக்குத்தத்தத்தை விசுவாசிக்காதபடிக்கு எங்கள் மனக் கண்கள் குருடுபட்டு போய்விடுகின்றது. கலங்காதே திகையாதே, உன் தேவனாகிய கர்த்தர்தாமே உன்னோடேகூட வருகிறார் அவர் உன்னை விட்டு விலகுவதும் இல்லை. உன்னைக் கைவிடுவதும் இல்லை என்று அன்று மோசே என்னும் தேவ ஊழியருக்கு உரைத்த தேவன் என்றும் மாறாதவராயிருக்கின்றார்.

**மாற்கு 4:40**

**ஏன் இப்படிப் பயப்பட்டீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற் போயிற்று என்றார்.**

**ஜெபம்:** பரிசுத்தமுள்ள தேவனே, உலகத்திலே நாங்கள் காணும் பயங்கரங்களை கண்டு, உம்மேல் கொண்ட விசுவாசத்தை இழந்து போகாதபடிக்கு, தூய ஆவியின் வல்லமையால் என்னை பெலப்படுத்தி வழிநடத்தும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உயர்ந்த அடைக்கலம்

விஞ்ஞானதொழில்நுட்பமானது என்றுமில்லாத அளவு வளர்ச்சி கண்டிருக்கின்றது என்பதை நாங்கள் காண்கின்றோம். நாட்டுக்கு நாடு தங்கள் தங்கள் பாதுகாப்பிற்காக பல சாதனங்களை உண்டு பண்ணி, விண்வெளிக்கு ஓடங்களை அனுப்பிக் கொண்டிருக்கின்றார்கள். இவ்வண்ணமாகவே மனிதர்களும் தங்கள் கிரியைகளைக் குறித்து மேன்மையடைகின்றார்கள். உலக ஐசுவரியம் நிறைந்தவர்களும், பெரும் அதிகாரத்திலுள்ளவர்களும் தங்கள் மாளிகைகளை பாதுகாப்பு வலையமாக மாற்றிக் கொள்கின்றார்கள். வல்லரசு நாடுகளிலும், தங்கள் நாட்டின் இரகசியங்கள் ஒன்றுமே வெளியில் செல்லாதபடிக்கு பெரும் பாதுகாப்பான கட்டிடங்களை அமைத்து, தொழில்நுட்பத்தால் அதை பாதுகாத்துக் கொள்கின்றார்கள். இப்படியாக மனிதன் எந்த காரியத்தை குறித்து, மேன்மை பாராட்டினாலும், ஒரு சில வினாடிகளுக்கு ஏற்படும் பூமியதிர்ச்சி, அவன் அமைத்தவைகளை இருந்த இடம் தெரியாமல், பூமி அவைகளை உள்வாங்கிக் கொள்கின்றது. பூமியின் சிறிய அசைவுக்கு முன்பாக ஒருவரும் நிற்கமுடியாது. ஆகையால் பூமி நிலைமாறினாலும், மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்துபோனாலும், அதின் ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி, அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும், நாம் பயப்படோம். (சேலா.) ஒரு நதியுண்டு, அதின் நீர்க்கால்கள் தேவனுடைய நகரத்தையும், உன்னதமானவர் வாசம்பண்ணும் பரிசுத்த ஸ்தலத்தையும் சந்தோஷிப்பிக்கும். தேவன் அதின் நடுவில் இருக்கிறார், அது அசையாது. அதிகாலையிலே தேவன் அதற்குச் சகாயம்பண்ணுவார். ஜாதிகள் கொந்தளித்தது, ராஜ்யங்கள் தத்தளித்தது. அவர் தமது சத்தத்தை முழங்கப்பண்ணினார், பூமி உருகிப்போயிற்று. சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார் யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர். (சேலா.) ஆம் பிரியமானவர்களே, நாம் வாழும் இந்த பூமி தேவனுடைய கிருபையால் நிலைநிற்கின்றது. மனிதர்கள் தேவ கிருபையை மறந்து தங்கள் ஆக்கங்களில் பெருமிதமடையலாம் ஆனால், நாங்களோ உயர்ந்த அடைக்கலத்தில் எங்களை வைத்தவரை நோக்கிப் பார்ப்போம்.

**சங்கீதம் 46:7**

**சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார் யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர்.**

**ஜெபம்**: ஆபத்து நாளில் அடைலக்கமான தேவனே, என் செய்கைகளினால் நான் பெருமிதமடைந்து உம்முடைய நீடிய பொறுமையை அசட்டை செய்யாதபடி வாழ எனக்கு உணர்வுள்ள இருதயத்தைத் தந்தருளும் இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நியமிக்கப்பட்டிருக்கும் ஓட்டம்

மற்றய மனிதர்கள் செய்யும் தவறுகளால் நாங்கள் இடறலடையாதபடிக்கு எங்கள் சமாதானத்தைக் காத்துக் கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, நெடுஞ்சாலை விதிகளை கடைப்பிடிக்காமல் ஒரு வாலிபன் தான் நினைத்தபடி வாகனத்தை ஓட்டிச் சென்று கொண்டிருந்தான். அயல் வாசிகளில் ஒருவன் அவனுக்கு பலமுறை புத்திமதி கூறியும் அதை அவன் பொருட்படுத்தாமல், முன்பு செய்தது போல செய்து வந்தான். அந்த வாலிபனின் நிலையை கண்ட அயல் வாசி குழப்பமடைந்தான். இந்த சம்பவத்திலே அந்த வாலிபனே குற்றம் செய்து திரிகின்றான், ஆனால் அந்த வாலிபனின் செயல்களினால் குற்றம் செய்யாத அந்த அயல் வாசி தன் சமாதானத்தை கெடுத்துக் கொண்டான். இந்த சம்பவத்தை எங்கள் வாழ்க்கையோடு இணைத்து சிந்தித்துப் பார்ப்போம். சபையிலுள்ள மனிதன் ஒருவன் தேவனுக்கு எதிரான காரியம் ஒன்றை செய்து விட்டான். அது தவறு என்று அறிந்தும், ஆலோசனைகளை தள்ளிவிட்டு, மனந்திரும்ப மனதில்லாமல் தான் செய்வதை துணிகரமாக செய்து வந்தான். தனக்கும் தேவனுக்கும் இடையிலுள்ள உறவை அவன் உடைத்துப் போடுவதால், அந்த மனிதன் தன் ஆத்துமாவிற்கு கேடு விளைவித்துக் கொள்கின்றான். அந்த மனிதனின் வாழ்வைப் பார்த்து நாங்கள் இடறல் அடைந்து போகக் கூடாது. மோசே என்னும் தேவ ஊழியர், எகிப்தின் அடிமைத்தனதிலிருந்து இஸ்ரவேல் ஜனங்களை அழைத்து சென்ற போது, அவர்கள் மத்தியிலும் கலகக்காரர்கள் இருந்தார்கள். அவர்கள் எப்பொழுதும் வழுவிப்போகின்ற இருதயமுடையவர்களாக இருந்தார்கள். ஆனாலும் காலேப்பு, யோசுவா போன்ற மனிதர்கள் தங்கள் இலக்கின் மேல் கண்களை பதிய வைத்திருந்தார்கள். பல்லாயிரக்கணக்கான ஜனங்கள் கலகம் செய்த போதும் அவர்கள் இடறலடையவில்லை. தேவனையே நம்பி இருந்தார்கள். அதுபோல, நாங்களும் எங்கள் கண்களை இயேசுவின் மேல் பதிய வைக்க வேண்டும். நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம். ஒரு வேளை பலர் வழி விலகிப்போனாலும் நாங்கள் மாசற்றவர்களாக, தேவ சித்தத்தை நிறைவேற்ற வேண்டும்.

**பிலிப்பியர் 2:15**

**கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்றபிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு,**

**ஜெபம்**: பரலோக தேவனே, ஜீவ ஓட்டத்தில் நியமிக்கப்பட்டவர்கள் கூட வழிவிலகிப்போனாலும் உம்முடைய மாசற்ற பிள்ளையாய் நான் என் ஓட்டத்தை பொறுமையோடு ஓடி முடிக்க கிருபை செய்யும் இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மன்னிக்கும் மனநிலை

இரண்டு அயலவர்கள் கடுமையாக வாக்குவாதம் செய்து ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்ள முற்படும் போது, அந்த சிறு கிராமத்தில் வாழ்ந்து வந்த மனிதன் ஒருவன் அவர்களில் ஒருவனிடம், நீ மற்றவனின் குற்றத்தை தயவாய் மன்னித்துவிட வேண்டும் என்று வேண்டிக் கொண்டான். அப்பொழுது அந்த அயல்வாசி அந்த மனிதனைப் பார்த்து, நீ உன்னுடைய சகோதரன் செய்த குற்றத்தை பல வருடங்கள் மன்னியாதிருக்க எப்படி என்னை பார்த்து இன்னுமொருவனுடைய குற்றத்தை மன்னித்துவிடு என்று கேட்டுக் கொள்ள முடியும் என்றான். இந்த சம்பவத்தை சற்று சிந்தித்துப் பாருங்கள். நாங்கள் மற்றவர்கள் ஒருவரோடு ஒருவர் சமாதானமாக வாழ வேண்டும் என்று ஜெபிப்பதற்கு முன்னதாக, எங்கள் இருதயத்தில் இருக்கும் கசப்புக்கள் யாவும் அகற்றப்பட வேண்டும். என் சகோதரன் ஒருவன் எனக்கெதிராக பேசியிருக்கும் வார்த்தையை நான் மன்னித்துவிட மனதில்லாமல் இருக்கும் போது, நான் தேவனுடைய சமுகத்திற்கு சென்று, இன்னுமொருவனுடைய குற்றத்திற்காக எப்படி பரிந்து பேச முடியும்? முதலாவதாக, என் இருதயத்திலே கசப்புள்ள எண்ணமிருந்தால், நான் எனக்காக வேண்டுதல் செய்ய வேண்டும். இருதயங்களை ஆராய்ந்தறிகின்ற தேவன் எங்கள் மனநிலையை அறிந்திருக்கின்றார். எங்களை எதிர்த்து தகாத வார்த்தைகளை பேசிய மனிதன், ஒரு வேளை சமாதானத்திற்கு இணங்காதவனாகவும் எங்களோடு பேச மனதில்லாதவனுமாக இருக்கலாம். ஆனால் எங்கள் மனநிலை தேவனுக்கு முன்பாக ஏற்புடையதாக இருக்க வேண்டும். நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள். சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களைவிட்டு நீங்கக்கடவது என்று பரிசுத்த வேதாகமம் எங்களுக்கு அறிவுரை கூறுகின்றது. "உன் கண்ணி லிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகைபார்ப்பாய்" என்று கர்த்தராகிய இயேசு சொன்னது போல, நாங்கள் எங்கள் நிலையை சரிபடுத்திக் கொள்ள வேண்டும்.

**மத்தேயு 7:3**

**நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன?**

**ஜெபம்:** நீதியின் தேவனே, என் உள்ளத்தின் நினைவுகளை அறிந்திருக்கின்றீர், உமக்கு முன்பாக உண்மையுள்ள இருதயத்தோடு நான் வாழும்படிக்கு என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மனத் தாழ்மை

இரண்டு மனுஷர் ஜெபம்பண்ணும்படி தேவாலயத்துக்குப் போனார்கள் ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன். பரிசேயன் நின்று தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும், இந்த ஆயக்காரனைப்போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன் என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்திவருகிறேன் என்று, தனக்குள்ளே ஜெபம்பண்ணினான். ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான். அவனல்ல, இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் ஏனெனில் தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்று இயேசு ஒரு உவமையைக் கூறினார். தேவனுடைய சமுகத்திற்கு ஜெபிக்கும்படி நாங்கள் செல்லும் போது, தாழ்மையுள்ளவர்களாக செல்ல வேண்டும். எங்கள் வாழ்க்கையில் ஏதாவது நீதியின் கிரியை இருக்குமென்றால், அதுவும் தேவனுடைய கிருபையாக இருக்கின்றது. உள்ளத்தை ஆராய்ந்தறிகின்ற தேவன் எங்கள் வாழ்க்கையையும், அந்தரங்கத்திலே நாங்கள் செய்யும் கிரியைகளையும் அறிந்திருக்கின்றார். எனவே தேவனுடைய சமுகத்திலே உண்மையுள்ளவர்களாக, எங்கள் நிலையை எடுத்துக் கூற வேண்டும். நாங்கள் நற்கிரியைகள் செய்ய வேண்டும் என்று தேவன் விருப்பமுள்ளவராக இருக்கின்றார். ஆனால் எங்கள் இருதயத்தில் எங்கள் கிரியைகளைக் குறித்து ஏதாவது பெருமை இருக்கும் என்றால், அதை தேவனிடம் கூற வேண்டும். ஆண்டவரே இந்த பெருமையான சிந்தையிலிருந்து அடியேனை விடுதலையாக்கும் என்று ஜெபிக்க வேண்டும். அவர் நிச்சயமாக எங்கள் ஜெபத்தைக் கேட்டு நன்மையான ஈவுகளை பரத்திலிருந்து எங்களுக்குப் பொழிந்தருள்வார். எனவே எந்தக் காரியத்தைக் குறித்தும் பெருமையடையாமல், கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்.

**யாக்கோபு 4:6**

தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது.

**ஜெபம்:** அன்பான பிதாவே, மேன்மைபாரட்டுவதற்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை. என்னில் இருக்கும் எல்லாவிதமான பெருமையான சிந்தைகளையும் உமது பெலத்தினால் அகற்றிவிட என்னைப் பெலப்படுத்தும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவன் பட்சபாதம் இல்லாதவர்

**ரோமர் 2:11**

தேவனிடத்தில் பட்சபாதமில்லை.

தெருவிலே பல ரகமான வாகனங்களை காண்கின்றோம். அவற்றுள் சில மிகவும் விலையுயர்ந்ததாகவும் சில விலை குறைந்ததாகவும் காணப் படலாம் ஆனால் அவைகள் யாவும் ஒரே தெரு வழியாகவே ஓட் டப்படுகின்றது. அவைகள் யாவற்றிற்கும் ஒரே விதமான நெடுஞ்சாலை விதிகளும் சமிக்ஞைகளும் போடப்பட்டிருக்கின்றது. உலகிலே வாழும் ஜனங்களில் சிலர் மாளிகைகளிலும் சிலர் சாதாரண குடியிருப்புக்களிலும் வாழ்ந்து வரலாம், வாழ்க்கையின் தரங் கள் வேறுபட்டிருந்தாலும், அவர்கள் யாவருக்கும் ஒரே விதமாகவே சம்ப விக்கின்றது. எப்படியெனில் உயர்ந்தவர்களும், தாழ்ந்தவர்களும், செல்வந்தரும், ஏழைகளும், ஞானிகளும், மூடரும், துன்மார்க்கர்களும், சன்மார்க்கர்களும் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்தாலும் அவர்கள் யாவரும் ஒருநாள் இந்த பூமியிலே பிறந் தார்கள், சில ஆண்டுகள் வாழ்கின்றார்கள், ஒருநாள் இந்த உலகத்தை விட்டு யாவரும் கடந்து செல்ல வேண்டும். இவை யாவும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியதிகள். அதிலே எந்த மாறுபாடும் இல்லை. இந்த உலகிலே சிலர் சரித்திரம் படைக்கலாம். காலாகாலம் தங்கள் பெயர் இந்த பூமியில் விளங்கும்படி உலக சாதானைகளை செய்யலாம் ஆனால் விண்ணும் மண்ணும் அதிலுள்ளவைகள் யாவும் ஒரு நாள் ஒழிந்து போகும். அந்நாளிலே எல்லா பெயரும் புகழும் ஒழிந்து போகும். ஒரு வேளை இந்த உலகத்தின் அளவுகோல் தராதரத்தின் அடிப்படையில் வகுக்கப்படலாம் ஆனால் தேவன் உலகத்தின் பாகு பாடுகளின்படி மனிதர்களை கண்ணோக்குகின்றவர் அல்லர். தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார். சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவனை அளிப்பார். சண்டைக்காரராயிருந்து, சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல், அநியாயத்திற்குக் கீழ்ப்படிந்திருக்கிறவர்களுக்கோ உக்கிர கோபாக்கினை வரும். பிரியமானவர்களே, இந்த உலக கணிப்பின்படி உங்களுடைய வாழ்வை நீங்கள் நிச்சயிக்காதிருங்கள். நீங்கள் தேவனுக்கு பயந்து அவர் கற்பனைகளின் வழியில் வாழும் போது, இந்த உலகம் எப்படியாக உங்களை கணிப்பிட்டாலும் அதனால் சோர்ந்து போய்விடாதிருங்கள். தேவன் உங்களை நம்பி தந்த பொறுப்பு, அது பெரிதாக இருந்தாலும் சிறிதாக இருந்தாலும் அதை நிறைவேற்றுங்கள். அவர் வெளிப்படும் நாளிலே பெரிதான பலன் உண்டு.

**ஜெபம்**: நீதியின் தேவனே, இந்த உலகத்தின் அங்கீகாரத்தை பெறும்படியாய் நான் வாழாமல், உம்முடைய வழியில் பயபக்தியோடு வாழும்படிக்கு எனக்குக் கற்றுத் தாரும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அன்பான வாசகர்களுக்கு!

**'உள்ளான மனிதன்'** பிரதியை பெற்றுக் கொள்ளுங்கள்!

உள்ளான மனிதன் சஞ்சிகையின் **மென்பிரதியை** எங்கள் இணையத்தளத்தில் வாசிக்கலாம். அத்துடன் அனுதின தியானம் என்ற தலைப்பின் கீழ், ஒரு **தனிப்பட்ட இணைய-த்தள பக்கமும்** பதிவேற்றப்பட்டுள்ளது. புத்தகங்களை தபால் மூலம் பெற்றுக்கொள்ள, உங்கள் முகவரியை, மின்-அஞ்சல் ஊடாகவோ, அல்லது தொலைபேசி ஊடாகவோ எங்களுக்குத் தெரியப்படுத்தலாம். அல்லது அடுத்த பக்கத்தி லுள்ள விண்ணப்பப் படிவத்தில் உங்கள் விபரங்களை பதிவு செய்து, எங்கள் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

மாதாந்தம் இந்த சஞ்சிகையை வாசித்த பின்பு மற்றவர்களு டனும் பகிர்ந்து கொள்ளுங்கள். கூடுமானவரை, தேவனை அறியாதவர்களுடன் இதனை பகிர்ந்து கொள்ளுங்கள். தேவ-னுடைய ஜீவ வார்த்தைகள், அந்தந்த நாளுக்கு மட்டுப்படுத் தப்பட்டவைகளல்ல.

தற்போது கிறிஸ்தவ ஆவிக்குரிய ஐக்கியமொன்றிலும் இணைந்திருக்காவிட்டால், எங்களுடன் சேர்ந்து தேவனை ஆராதிக்கும்படியாக உங்களை வரவேற்கின்றோம்.

**தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக் கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வள வாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்**. (யோவான் 3:16)

**கிருபையின் கூடாரம் அப்போஸ்தல சபை**

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909**

etachurch.ca

உள்ளான மனிதன் மாதாந்த பிரதி

# விண்ணப்பப் படிவம்

முழுப் பெயர் FULL NAME:

| |
|---|
| |
| |

முகவரி ADDRESS:

| |
|---|
| |
| |

நகரம் CITY:

தபால் குறியீடு POSTAL CODE:

மாநிலம் PROVINCE:

தொலைபேசி TELEPHONE:

மின் அஞ்சல் E-MAIL:

விண்ணப்பப் படிவம் அனுப்பப்பட வேண்டிய முகவரி

**THE INNER MAN – GTAC**
**7700 MARKHAM ROAD**
**P. O. BOX 3052**
**MARKHAM, ON L3S 4T1**

MAIL THE APPLICATION FORM TO THE ABOVE MENTIONED ADDRESS

gtachurch.ca

gtachurch.ca

210 Silver Star Blvd., Unit 807, Scarborough, ON M1V 5J9

**www.gtachurchnet.ca ☎ 416.613.2909**